பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Na.

மலர் : 134
இதழ் : 11
பக்கங்கள் : 08
திகதி : 27.06.2010
விலை : 15.00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

# பாதுகாவலன்
# Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

யூலை மாதத்தில் விழாக்கள் காணும் யாழ் ஆயரின் விருதுவாக்கு

## அனைத்தும் நற்செய்திக்காகவே

### போர்க்கால நெருக்கடியும் ஆயரின் மேய்ப்புப் பணியும்

பழம் பெருமை மிக்க யாழ்பாண மறைவட்டத்தின் மூன்றாவது சுதேச ஆயரான அதிவந். இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட தினம் (யூலை 3) யாழ் ஆயராக நியமனம், (யூலை 6), பிறந்த தினம் (யூலை 13), ஆயத்துவ அபிஷேகம் (யூலை 30) ஆகியவை நினைவு கூரப்படும் மாதமாக யூலை மாதம் அமைவது இம்மாதத் தின் சிறப்பாகும்.

போர் மையம் கொண்டிருந்த காலத்தில் யாழ் மறைமாவட்டத்தின் பொறுப்பை தன் தோள்மேல் சுமந்த ஆயர் அவர்கள் பல கடினமான, கசப்பான கால கட்டங்களை வலிந்து தாண்ட வேண்டி இருந்தது. விடை காண முடியாத பல சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. தமது சக்திக்கு அப்பாற்பட்ட பல நிகழ்வு களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் என்றுமில்லா தவாறு எழுந்த நெருக்கடிகள், சிலுவைகள் பல. இவை ஏற்படுத்திய



வலிகள் ஏராளம். ஆனால் "நாம் உடைக்கப்படுகின்றோம் ஆனால் நொருங்கிப்போவதில்லை" என்ற தூய பவுலின் வார்த்தைகளை சார்ந்து, எமது ஆயர் அவர்கள் இறைத்துணையோடும், குருக்கள், இறைமக்களின் ஒத்துழைப்பு செபங்களோடும் இவற்றையெல்லாம் கடந்து வந்திருக்கிறார். வன்னிப் போரின் முன்னும் பின்னும் மக்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். இன்று அம்மக்களின் மீள்குடியேற்றம் பற்றி அதிக கவலை கொண்டுள்ளார்.

எளிமை, தன்னடக்கம், இறை நம்பிக்கை ஆகியவற்றை தன்ன கத்தே கொண்ட ஆயர் அவர் களின் உடல் ஆன்ம நலன் சிறக்கவும் அவரின் பணி வாழ்வு மேலும் ஊட்டம் பெறவும் இறை ஆசீரும் வழி நடத்தலும் தொடர்ந்து கிடைக் கவும் ஆயரின் இச்சிறப்பு மாதத்திலே அவருக்காக வேண்டுவோம். அனைத் தும் நற்செய்திக்காகவே என்ற அவரின் விருதுவாக்கு மூலம் அவர் இறைமக்களுக்கு ஆற்றி வரும் அளப்பெரிய நன்மைகளுக்காக ஆயருக்கும் இறைவனுக்கும் இந்நாளில் நன்றி கூறுவோம்.

## குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளின் வாழ்த்து



அயராது உழைக்கும் அர்ப் பணம் நிறைந்த எம் ஆயரை அவர் நாமம் கொண்ட நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். நறசெயதி போதனையிலே எல்லோரையும் கவரும் வண்ணம் இலகுவான எளிய நடையிலே ஆழமான கருத்துக்களை அள்ளிதரும் ஆற்றல் படைத்தவர். போரினாலும் பேரலைகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக

(8ம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகிறோம் வாழ்க வாழ்க



தோமஸ் எனும் திருநாமம் பூண்ட எங்கள்
யாழ் மறையின் ஆண்டகையே சவுந்தரமே
நல்லாயன் இயேசுவைப் போல் வழிநடக்க
உம்மை அன்பில் உளமார வாழ்த்துகிறோம்

அபிஷேகப் பொழிவு பெற்ற கரங்களிலே
நெடிந்துயர்ந்த அழகான செங்கோலைத் தாங்கி
சிதறுண்ட மந்தைகளை தேடிச்சென்று
பணிபுரிய வேண்டி நின்னை வாழ்த்துகிறோம்

நொறுங்குண்ட இதயங்கள் மலிந்து போன
எம் மண்ணில் விசுவாச ஒளியைத் தந்து
நிறைவான பணிசெய்து நீடு வாழ
திருநாளில் வாழ்த்துகிறோம் வாழ்க வாழ்க

இ. அ. அமலரட்ணம்
பேராலயம்

### பாடசாலை மாணவருக்கான ஆயரின் திருப்பலி - யூலை 2

ஆயர் தமது பெயர் கொண்ட தினத்தை யூலை 2ம் திகதி மரியன்னை பேராலயத்தில் பாடசாலை மாணவர்களோடு இணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுப்பார். இத்திருப் பலியை யாழ் மறைகல்வி நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ஆன்மீக ஆழம் நிறைந்த எம் ஆயர்

அருட்பணி. இ.ஜீ. விஜின்ரஸ்
ஆயரின் செயலாளர்

எமது ஆயர் அதி.வந்தனைக் குரிய இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் 2010ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி தன் பெயர் கொண்ட விழாவை கொண்டாடும் போது நாங்களும் மகிழ்ந்து இந்நாளில் ஆயரை வாழ்த்துவது பொருத்தமானதே. மகிழ்வான இந்நாளில் ஆயருடன் கூட இருந்து அவரை கண்டு அவரிடம் கேட்டவற் றையும், படித்தவற்றையும் ஒன்றிணைத்து "நான் கண்ட ஆயன்" என்னும் தலைப்பில் எம் ஆயரைப் பற்றி கூறுவதும் என் கடமை என உணர்கிறேன்.

"நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக் கிறேன் அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக் கின்றன" (யோ 10:14-15) என்ற

(8ம் பக்கம் பார்க்க)

## ஆயரின் சாட்சிய வாழ்வு

அருட்பணி அன்ரனிதாஸ் அடிகள்

யூலை மாதம் எமது யாழ் திருச்சபைக்கு பெரும் மகிழ்வூட்டும் மாதம் ஆகும். அதிலும் குறிப்பாக யாழ் திருச்சபையை சேர்ந்த அனைத்து கத்தோலிக்க பாடசாலை களின் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மறைமாவட்ட துறவியர், அருட்பணியாளர்கள் ஒன்று சேர்ந்து யாழ் திருச்சபையின் தலைமை ஆயருக்கு யூலை மாதத்தில் வரும் முப்பெரு விழாக்களை ஒரே நாளில் ஆயருடன் சேர்ந்து கொண்டாடி மகிழும் நாள். அது தான் யூலை மாதம் மூன்றாம் திகதி அவரின் பெயர் கொண்ட திருத்தூதரான தூய தோமையாரின் திருநாள் ஆகும். இந்நன்நாளில் எமது கத்தோலிக்க கல்வி சமூகம் ஆயரின் தலைமை யில் யாழ் மரியன்னை பேராலயத் தில் ஒன்றாக கூடி விழா எடுக்க வுள்ளது. இவ்விழா இவ்வாண்டு (2010) இவ்விழா யூலை மாதம் மூன்றாம் திகதி சனிக்கிழமை விடுமுறை நாளில் வருவதால் இவ்விழாவை இம்முறை யூலை மாதம் இரண்டாம் திகதி வெள்ளிக் கிழமை கொண்டாட ஆயர் இல்லம் தீர்மானித்துள்ளது.

நாம் எமது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தின் பணி வாழ வையும், அவர் தம் பணிக்காலங் களையும், பணித்தளங்களையும் சற்று சுருக்கமாக நோக்குவோம்.

(8ம் பக்கம் பார்க்க)

## திருத்தந்தை திருச்சபைத் தலைவராகப் பொறுப்பேற்ற ஐந்தாம் ஆண்டு

உரோமையிலுள்ள கர்தினால் கள் அனைவரும் திருத்தந்தை திருச்சபைத் தலைவராகப் பொறுப் பேற்ற ஐந்தாம் ஆண்டை சிறப்பிக்க உள்ளனர். ஏப்ரல் 16 அன்று தனது 83வது பிறந்த நாளைக் கொண் டாடிய திருத்தந்தை 1927ஆம் ஆண்டு

(8ம் பக்கம் பார்க்க)



## இறைவனின் வார்த்தையை கரம் ஏந்தி வாழ்வு கொடுத்த தூய அந்தோனியார்



திருத்தலத்தில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருவிழாத்திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டது. அத்திருவிழாத் திருப் பலியில் மறையுரை ஆற்றிய யாழ். மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருட்பணி அன்ரனிதாஸ் அடிகள் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தமது மறையுரையில் புனித அந்தோனியார் தன் வாழ்வில் இரு பெரும் சேவைகள் புரிந்ததை அழுத் தம் திருத்தமாக கூறினார். ஒன்று தவறான வழியில் சென்ற மக்களுக்கு அருளுரை மொழிந்து நல்வழிப் படுத்தியது; இரண்டு, மக்களுக்கு சமூக பணி ஆற்றியது. இவை இரண் டையும் அவர் ஆற்றிய விதத்தை கண்ட மக்கள் அவரை கோடி அற் புதர் என பட்டம் சூட்டினர். ஆனால் அவர் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் அடித்தளமாய் இருந்தது அவர் கையில ஏந்தி விசுவசித்த இறை வார்த்தையும் அவர் வாழ்ந்த மாசு மறுவற்ற தூய வாழ்வுமே.

(8ம் பக்கம் பார்க்க...)

## அமெரிக்காவில் அன்னை திரேசாவிற்கு அஞ்சல் தலை



கொல்கொத்தா முத்திப்பேறு பெற்ற அன்னை திரேசாவின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு இவ்வாண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டு அஞ்சல்துறை, அன்னை திரேசா தபால்தலை ஒன்றை வெளியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. வரும் ஆகஸ்ட் மாதத்தில் அன்னை திரேசாவின் நூறாவது பிறந்த நாள் ஆண்டு நிறைவடையும்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன்

## அருட்பணியாளர்கள் புதிய சமூகத்தின் சிற்பிகளாக .....

திருத்தந்தை அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட குருக்களுக்கான ஆண்டு இம்மாதம் 19ம் திகதியோடு நிறைவுக்கு வந்திருக்கின்றது. தூய ஜோண் மரிய வியான்னியின் விண்ணகப் பிறப்பின் 150வது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து இப்பிரகடனம் இடம்பெற்றது. திருச்சபையில் குருக்களின் வாழ்வும், பணியும் பெறும் முக்கியத்துவத்தை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் குருக்களின் வாழ்விலும், பணியிலும் ஆழமாக்குதலையும், புதுப்பித்தலையும் ஏற்படுத்துவதும் இப்பிரகடனத்தின் நோக்கங்களாக அமைந்திருந்தன. இப்பின்னணியில் குருக்களுக்கான ஆண்டு முடிவடைந்திருக்கும் இவ்வேளையில் எமது மறைமாவட்டத்தில் இது எவ்வளவு தூரம் பயனுள்ள வகையில் அனுசரிக்கப்பட்டது என்ற வினா பொருத்தப்பாடானதாகவே அமைந்திருக்கின்றது. செய்யப்பட்ட விடயங்களையும், செய்யப்பட்டிருக்கக்கூடிய விடயங்களையும் பட்டியலிட்டு இப்பத்தியை விவாத மேடையாக்குவது எமது நோக்கமல்ல, ஆனால் ஆத்மார்த்தமாக நாங்கள் ஒவ்வொருவரும் வினாவெழுப்பி விடை தேடவேண்டும் என்ற வேண்டுகோளை 'நாம் முன்வைக்கின்றோம். விழிப்புணர்வும், புதுப்பித்தலும் ஓராண்டுக்குள் முடியும் விடயமல்ல ஆயின் சில பொறிகளாவது ஏற்பட்டிருக்குமானால் அவை பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலே பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு ........"

x x x

### மாறிவரும் புரிதல்

அருள்பணியாளர்கள் என்பவர்கள் ஆன்ம காரியங்களில் மட்டும் ஈடுபட வேண்டியவர்கள். வழிபாடுகளையும், அருட்சாதனங்களையும், ஆராதனைகளையும் சிறப்பாக நடைமுறைப்படுத்த தெரிந்திருக்க வேண்டியவர்கள்: உலக விடயங்களிலிருந்து ஒதுங்கி உடலை ஒறுத்து, பக்தியில் பரவசமாக வேண்டியவர்கள் என்ற மரபுப் புரிதல் இன்று மாறி வருகின்றது. அனைத்துத் தளங்களிலும் பணியாற்ற வேண்டியவர்கள் அருட்பணியாளர்கள். அவர்கள் இறையாட்சியின் பணியாளர்கள். இறையாட்சி என்பது ஏலவே இவ்வுலகில் தொடங்கி விட்ட ஒன்று ஆகவே இவ்வுலகின் சமய, சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மெய்மைகளை இறையாட்சியின் விழுமியங்களுக்கேற்ப ஒழுங்குபடுத்தும் கடப்பாடும் அவர்களுக்குரியது என்கின்ற கருத்துக்களும் இன்று பரவலாக ஏற்கப்பட்டு வருகின்றன.

அருள்பணி பற்றிய புதிய புரிதலிலே அவர்களது வழிபாடு சார் ஆன்மீகப் பணிகள் நிராகரிக்கப்படவில்லை ஆனால் அவை புதிய பரிமாணம் பெறுகின்றன. உறவும், மன்னிப்பும், நீதியும், நிலை மகிழ்ச்சியும் கொண்ட புதிய இறை சமூகத்தை கட்டியெழுப்பும் விதத்திலே வழிபாடுகளையும், அருட்சாதனங்களையும் முன்னெடுக்க அருள்பணியாளர்கள் அழைப்புப் பெறுகிறார்கள். இப்புதிய சமூகத்தின் ஊற்றாகவும், உச்ச வெளிப்பாடாகவும் வழிபாடுகள் திகழ வேண்டுமென இரண்டாம் வத்திக்கான் சங்கம் அழைப்பு விடுக்கிறது.

### அனைத்துக் கிறிஸ்தவர்களும் பணியாளர்களே

மரபுப் புரிதலிலே இறை பணி என்பது ஆன்மீகப் பணியாகவும் அது அருள்பணியாளரிடம் கொடுக்கப்பட்ட தனிச்சொத்தாகவும் கருதப்பட்டது. அருள்பணியாளர்களின் இப்பணியிலே அவர்களோடு ஒத்துழைப்பதும் அவர்களுக்கு உதவுவதுமே பொதுநிலையினரின் கடமை என்றும் எண்ணப்பட்டது. ஆனால் புதிய புரிதலிலே இப்பணி முழுத்திருச்சபையிடமும் ஒப்படைக்கப்பட்டது என்ற கருத்தும் பொதுக்குருத்துவ அழைப்பின் பெயரில் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் புதிய சமூகம் படைக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து முதன்மை பெறுகின்றன. இப்பின்னணியில் அருள்பணியாளரின் பணி புதிய பரிமாணம் பெறுகின்றது. பொதுநிலை நம்பிக்கையாளரையும் ஏன் முழுத்திருச்சபையையுமே இப்புதிய படைப்பாக்கும் பணியில் ஈடுபடத் தூண்டுவதும், அதற்குரிய விதத்தில் அவர்களை வார்த்தையாலும், வழிபாட்டாலும் ஊக்கப்படுத்துவதும் ஈடுபடுகின்ற போது உற்சாகப்படுத்தி நெறிப்படுத்துவதும் அவர்களது பணியாகக் பரிமாணம் பெறுகிறது.

### புதிய சமூகத்தின் சிற்பிகளாக...

திருத்தந்தை அவர்கள் கையொப்பமிடும் போது பணியாளரின் பணியாளன் எனக் குறிப்பிட்டு கையொப்பமிடுவாராம். அருள்பணியாளரைப் பொறுத்தவரையில் இது ஒரு அடிப்படை உண்மையாகும். இறையாட்சிப் பணியின் பணியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் அனைத்து நம்பிக்கையாளரையும் அப்பணியில் திடப்படுத்தி ஊக்குவிக்கும் பணியாளனாகவே ஒரு அருள்பணியாளர் திருநிலைப்படுத்தப்படுகின்றார். இயேசு கனவு கண்ட அந்த இறையாட்சி இம்மண்ணிலே விடிய முழுத்திருச்சபையும் உழைக்க வேண்டும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அதற்கேற்ற உறவுச் சமூகமாக திருச்சபையை கட்டியெழுப்பி அருங்கொடைகளையும், பணிகளையும் ஒருங்கிணைத்து "இதோ இறையாட்சி உங்களிடையே உள்ளது" என்ற இயேசுவின் வார்த்தைகளைத் திருச்சபைக்கு உள்ளேயும், புறம்பேயும் நனவாக்க ஒவ்வொரு அருள்பணியாளனும் பாடுபட வேண்டும்.

### தூய ஜோண் மரிய வியான்னி

தூய ஜோண் மரிய வியான்னி இத்தகைய ஒரு பணியை ஆற்றியிருந்த பின்னணியிலேயே அவருடைய விண்ணக வாழ்வின் 150வது ஆண்டை நினைவு கூர்ந்து குருக்களுக்கான ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. "ஆர்ஸ்" என்ற பங்கின் பணியாளராக அவர் நியமிக்கப்பட்ட போது அப்பங்கு தீமைகளால் நிறைந்து காணப்பட்டது. ஆயினும் தூய ஜோண் மரிய வியான்னி தன்னுடைய எளிமையான செப வாழ்வாலும், ஆழமான இறைவார்த்தைப் போதனையாலும், பொருள் பொதிந்த அருட்சாதனங்களாலும், சமூக ஈடுபாட்டாலும் படிப்படியாக ஒரு இறையுறவுச் சமூகமாக அவர்களைக் கட்டியெழுப்பினார். ஒவ்வொரு அருள்பணியாளனுக்கும் இத்தூயரின் வாழ்வு முன்னுதாரணமாகும். ஒவ்வொரு பங்கையும் இத்தகைய இறையுறவுச் சமூகமாக கட்டியெழுப்புவது எமக்கு முன் உள்ள கடமையாகும்.

### உடைந்த சமூகம் உருப்பெறக் காத்திருந்தது

முப்பதாண்டுகளுக்கு மேலாக நீடித்த போரினால் உருக்குலைந்த நிலையில் கிடக்கின்றது எமது சமூகம். நம்பிக்கையிழந்து வாழ்வதற்கான வழி தெரியாது, சரியான திசையில் வழிகாட்டுவோருக்காக ஏங்கிக் கிடக்கிறது.

**எக்காலத்தையும் விட இக்காலத்தில் தான் நற்பணியாளர்கள் தேவை மேலோங்கியுள்ளது. ஈடு செய்யப்படுமா? இவ்வரலாற்று பொறுப்பு?**

**அருட்பணி [illegible]**

## இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

7ம் பகுதி (நவாலியூர் நாயகி)




மாறுவேடம் பூண்ட குரவர் ஒருவர்
இலங்கைக்குச் செல்ல இருப்பதை அறிந்து
அனுமதிப்பத்திரம் இல்லாத எவரையும்
கப்பலில் ஏற்ற மறுத்துவிட்டனர்

கப்பலில் ஏற்று மறுத்த அதிகாரி
சடுதியாக இறந்ததையடுத்து
அடையாளம் காண முடியாத புதியவன்
"வாஸ்" அடிகளுக்கு அனுமதி அளித்தான்

'வாஸ்' அடிகளும் ஊழியர் ஜோணும்
கப்பலில் சந்தித்த போர்த்துக் கேயனுக்கு
நடந்ததைதைச் சொல்ல அவனும் ஆர்வமுடன்
அவர்களுக்கு உதவ ஆயத்தமானான்.

இருபது நாட்கள் புயலில் அகப்பட்டு
கஷ்டத்தின் மத்தியில் மன்னாரை அடைந்தனர்
திருத்த வேலை கப்பலில் இருந்தமையால்
பயணம் தொடரவில்லை பயணிகள் இறங்கினர்

பிச்சை எடுத்துண்ண நினைத்த வாஸ் அடிகள்
யேசுசபைக் குருகொடுத்த உணவையும் மறுத்து விட்டார்
பயணிகள் பகிர்ந்தளித்த உணவை உண்ட அவர்
பதினொரு நாட்களின் பின் பசியாலே வாடினார்



ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடைக்காத நிலையில்
நடக்கவும் முடியாமல் நண்பனையும் பிரிந்து
தங்க இடமுமின்றி உண்ண உணவுமின்றி
கைவிடப்பட்டவராய் கலங்கினார் வாஸ் அடிகள்

(தொடரும்)

## சிந்தனைக்கு சில

- ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவது இல்லை. அவனுடைய மனம் தான் உருவாக்குகிறது.
- மனிதனை உயர்த்துவது பணமென்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயரமன்று, அறிவு ஒன்று தான் மனிதனை அவனது வாழ்வில் உயர்த்தும்.
- ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம்
- ஆசை இருப்பவனிடம் அன்பும், ஆனந்தமும் நெடுநாள் தங்குவதில்லை.
- நாம் விரும்புவது நமக்குக் கிடைப்பதில்லை. எனவே கிடைப்பதையே நாம் விரும்புவோம்.
- மனம் உறுதியாக இருந்தால் பாம்பின் நச்சுகூட சக்தியற்றதாகிவிடும்.
- நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்களுக்கு மனம், வாக்கு, காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. நன்மையே செய்தல் வேண்டும். இது தான் உண்மையான பண்பாடு.
- தியாகம் செய்யவும், மன்னிக்கவும், நன்றி கூறவும் தெரிந்து கொண்டு விட்டால் நாம் மகிழ்ச்சியைத் தேடி ஓட வேண்டியதில்லை. அதுவே நம்மைத் தேடி வரும்.

M. டினோசா
இளவாலை

## சிந்தனைத் தூறல்கள் - 09

### இறைவன் இறப்பானா?

### அப்துல் ரகுமானின் சிறகுகளின் நேரம்

மார்ட்டின் லூதர், 'அவர் என்றால் யார்? என்று கேட்டார்.

அவருடைய மனைவி, 'இறைவன்' என்றார்.

மார்ட்டின் லூதருக்குக் கோபம் வந்து விட்டது. 'என்ன உளறுகிறாய் இறைவன் எப்படி இறப்பான்?' என்று கேட்டார்.

அவருடைய மனைவி, 'இறைவன் இறக்கவில்லை என்றால் நீங்கள் ஏன் மனமுடைந்து சோகமாக அமர்ந்திருக் கிறீர்கள்?' என்று கேட்டார்.

மார்ட்டின் லூதருக்கு உடனே அவர் செய்த தவறு புரிந்துவிட்டது. 'உண்மை தான். சோகமாக இருப்பது சாத்தானோடு சேருவதாகும்' என்றார்.

நம்மில் பலர், 'நான் இறைவனை நம்புகிறேன்' என்கிறார்கள்.

ஆனால், அவருடைய நம்பிக்கை வார்த்தை அளவில்தான்.

அவர்கள் அந்த நம்பிக்கையை வாழ்க்கையில் செயல்படுத்துவதில்லை.

செயற்பாடு இல்லாத நம்பிக்கை உயிரற்ற உடல் போன்றது.

இறைவனை நம்புவோர் அவன் பேராற்றலுடையவன் என்பதையும் நம்ப வேண்டும்.

அப்படி நம்புவோர் தமக்கு ஏதேனும் துன்பம் வந்தால் துவண்டு போக மாட்டார்கள்.

அந்த துன்பத்தை நீக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டு என்று நினைப்பார்கள்.

'இறைவா! இந்த துன்பத்தை நீக்குவது உன் பொறுப்பு' என்று வேண்டுவார்கள்.

பொறுப்பை கடவுளிடம் ஒப்படைத்து விட்டால் கவலை எதற்கு?

துன்பம் வரும் போது நாம் வருத்தப்படுகின்றோம் என்றால், நாம் இறைவனை மறந்து விட்டோம் என்று பொருள்.

இறைவனை மறுப்பது மட்டுமல்ல, மறப்பதும் நாத்திகம் தான்.

ஏனென்றால், அந்த நேரத்தில் நம்மை பொறுத்தவரை இறைவன் இல்லாது போகிறான் அல்லவா?

(இறைவன்... தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நற்செய்திக்காகவே அனைத்தும்

மாங்குயிலும் பூங்குயிலும்
மகிழ்ந்து பாடும் யாழ் மண்ணில்
மறைப்பணியை மங்காது செய்யும்
இறையருளவரே
வாழ்த்துகின்றோம் உம்மை

இருபத்து ஆண்டுகள் போர் நடந்து முடிந்தும்
முடிவுறாமல் தொடர்கின்ற புலம்பல்களும்
இரத்தத்தின் வாடைகளும் வெடுக்குகளும்
துப்பாக்கி வேட்டுக்களும் நிறைவுறாமல்
மைக்குழிகளும் பிணக்குழிகளாக
மாறிவிட்ட எம் மண்ணில் – உம்
அன்பான பணி – எமக்கு
அவசியம் வேண்டும்

உடல் தனிமைத் தீயிட்டு எரித்தாலும்
சாம்பலில் இருந்து மீண்டெழும் பீனிக்ஸ் பறவையாக
துளிர்க்கத் துடிக்கும் எம்மண்ணில்
இருள் கிழிக்கும் ஒளிக்கரமான
உம் அருட்கரம் தேவை எமக்கு

யுத்தத்தின் எச்சங்கள்
நெஞ்சில விதைத்துவிட்ட மிச்சங்களே
வாழ்க்கை என்னும் படகை
கரை சேர்க்கத் துடிக்கும் மக்களுக்கு – உம்
போதனைச் சாதனை தேவைதான்

ஆண்டவன் இயேசுவை
அறுதியாக நம்பியதால்
அவர் தன் போதனையை
ஆசியவரை கொண்டு சென்று – தன்
தலையையே தானமாக அளித்த
தோமையாரின் பெயர் கொண்ட நீ
நீதுலி காவல் பணி செய்து வாழ வாழ்த்துகின்றோம்.

பீ.சி. நிஷாலி
புனித மரியன்னை மகளிர் கல்லூரி

## உன்னைத்தால் உம்மை வாழ்த்துகின்றோம்

கரை புரண்டோட துடிக்கும்
கடலலைகள் தாலாட்ட
ஓங்கி நிற்கும் பனைகள்
ஒய்யாரமாய் இசைமீட்ட
கடலன்னையின் மூச்சுக்காற்று
பக்கத்தில் வந்திருந்து
பாச வருடல் செய்ய
இன்பங்கள் கொப்பளிக்கும்
இனிய பொன் பூமியாம்
ஊர்காவற்றுறை தனில்
உத்தம புத்திரனாய்
அருத்தவம் புதல்வனாய் – உதித்திட்ட
எம் ஆயனே! சவுந்தரனே!

பிரசங்க மேடைகளில் உமது
வார்த்தை வடிப்புக்களில்
வாழ்வின் துடிப்புக்களில் உள்ள
உணர்வின் கொதிப்பினை காணும் போது
மந்தைகள் மேல் நீர் வைத்த
பாசத்தையும் வழிநடத்தும் ஆர்வத்தையும்
நிறைவாய் உம்மிலே கண்டோம்
உமது ஆன்மீகத்தின் வலிமையை
ஆழமான ஈடுபாட்டை
வாயினால் சொல்ல
வார்த்தைகளே இல்லை.

ஆயியால் ஈர்ப்பை அபிஷேகம் செய்து
ஆண்டவன் பணிக்கு அனுப்பி வைப்பர் நீர்
குருமாணவர்கள் எம்மேல்
அக்கறையும் அதற்கு மேல் அன்பு காட்டி
அருகிருந்து அணைக்கும் தந்தையாய்
அடிக்கடி எம் நலம் அறிந்து
எமக்காய் எப்போதும் செபித்து
எம் உறவாக்கச் சிறக்க
எமக்காய் பாடுபட்டு வரும் உம்மை
உம் புனிதர் தினம் அன்று – எம்முழு
உள்ளத்தால் உம்மை வாழ்த்துகின்றோம்.

ஜெ. நிலான் சூலியஸ், புனித மடுத்தினார் குருமடம்



## போற்றுகின்றோம் ஆயரே

போற்றுகின்றோம் ஆயரே
உமது பெயர் கொண்ட
நாம விழாவை முன்னிட்டு
வாழ்த்தி செபிக்கின்றோம் உம் பணிகள்
சிறக்க உம்மை வாழ்த்துகின்றோம்

நல்ல ஆயன் இயேசுவின் வழிவந்தவரே
நற்கனிகளையும் வரங்களையும்
ஆவியின் அருளால் பெற்றவரே
வாழ்த்துகின்றோம் உம்மையே
வணங்குகின்றோம்.

எம் யாழ் மண்ணில்
பல்லாயிரம் மக்களை பண்புடன் வழிகாட்ட
பாங்குபெற்றவரே
பாராட்டுகின்றோம் உம்மை உம்
பணி சிறக்க

எம் யாழ் திருச்சபையின் தலைவரே
நித்தமும் சத்தியம் நிலைத்திட
நிறைவான பணி செய்தவரே
நீடூழி வாழ்க நீ செய்த
பணி யாழ் மண்ணில் சிறக்க
உம்மை வாழ்த்துகின்றோம்

டொ. யூலியானிஸ்ரீனி
யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

## வாழ்த்துகின்றோம் ஆயரே



வாழ்த்துகின்றோம் ஆயரே உமது
பெயர் கொண்ட நாம விழாவை
முன்னிட்டு வாழ்த்தி செபிக்கின்றோம்
உம் பணிக்காக

நல்லாயன் இயேசுவின் வழி வந்தவரே
நற்கொடைகள் ஆவியின் வரங்கள்
பெற்றவரே யாழ் மக்களை வழிநடத்தும்
சிறந்த நல்லாயராக விளங்குபவரே
வாழ்த்துகின்றோம் உம்மையே

எம் யாழ் மண்ணில் பல்லாயிரம்
மக்களை பண்புடன் வழிகாட்ட
பாங்குபெற்றவரே யாழ் மக்களை
சிறப்புடன் வாழ செய்பவரே
வாழ்த்துகின்றோம் உம்மையே

நல்லாயன் தன் ஆடுகளை எவ்வாறு
அறிந்திருக்கின்றாரோ அவ்வாறே நீர்
யாழ் மக்களை அறிந்திருக்கின்றீர்
இயேசுவைப் பின்சென்று இயேசுவைப் போல்
வாழ்பவரே பாராட்டுகின்றோம்

எம் யாழ் திருச்சபையின் தலைவரே
நித்தமும் சத்தியம் நிலைத்திட
நிறைவான பணி செய்தவரே
உம் சத்தியமும் நேர்மையும் நிலைக்க
இறைவனை வேண்டுகின்றோம்
யாழ் மக்களுக்கான சிறந்த பணி செய்பவரே
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்

அ. சுகயுதா
யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

## தோமஸ் சவுந்தரம் ஆண்டகை

ஊர்காவற்றுறை என்னும் எழில் கொஞ்சும்
நகரம் பெற்றெடுத்த எம் குலவிளக்கே
உன் தாயின் கருவில் இருக்கும் போதே
நான் உன்னை தேர்ந்துகொண்டேன்
என்ற இறைவாக்கின் அழைத்தவரே!

அழைப்பு பெற்றவர்களோ பலர் ஆனால்
தேர்ந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்று
ஆயிரத்துதொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்தாம் ஆண்டு
(1965-12-21) இறைபணிக்காய் அழைக்கப்பட்ட
எம் ஆயனே!

ஆழமான பிரசங்கத்திற்கும் குறும்பான பேச்சுக்கும்
எளிமையான வாழ்க்கைக்கும் உதாரணமாக
வாழ்ந்து காட்டுபவரே எம் மக்களுக்காக நீர் பட்ட
துன்பம் கொஞ்சமோ இருபத்தொன்பது ஆண்டு
உம் பணியில் வளர்ந்து நிற்கிறது யாழ் திருச்சபை

உம் அரவணைப்பும் அன்பும் உம் சமநிலையற்ற
பிறர்நல வாழ்வும் இன்னும் பல காலங்கள்
எமக்கு வேண்டும் இறை ஆசீருடன் உம் பணி
தொடரவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறோம்

யோ. யோனியா
யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

## ஆண்டவனுக்காய் அர்ப்பணித்த எம் ஆயரே...

ஞானத்தந்தையே!
கடற்கன்னி கரையோர மணலை
காதல் செய்து மகிழ
சூழ்ந்து நிற்கும் படலிகள்
இசையோடு தலையசைக்க
சொந்தங்கள் பட்சிகளாய்
சூழ்ந்து நிற்கும் வேளைதனிலும்
"உன் பணிக்கு நான் இதோ" என்று
ஆண்டவன் அழைப்பினை
அகமகிழ்வோடு ஏற்று அனைத்தையும்
ஆண்டவனுக்காய் அர்ப்பணித்து
அவர் பணி தொடர
குருவாகி ஆயராகி
30 வருட ஆயர்த்துவப் பயணத்தை
அனுபவத்தில் பொக்கிஷம் என்பதா?
அறிவினில் பெட்டகம் என்பதா?
ஆண்டவனின் சட்டகம் என்பதா?
உயர்ந்து நிற்கும் கட்டடம் என்பதா?

கெ. நிலான் யூலியஸ்,
புனித மடுத்தினார் குருமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு

ஜூன் 2009 - ஜூன் 2010



# பணி புரிய... பலியாக...

அருட்பணி மா. றேகிஸ் இராசநாயகம்

**முகவுரை :**

பலி செய்பவரே பலியாகும் ஓர் உன்னத அழைப்பே குருத்துவம். நேர்ச்சிப் பலிகள், தானியப் படையல்கள், பாவம்போக்கும் பாவப் பரிகாரப் பலிகள் என்று பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்தின் புரிதல்களைக் கடந்து, குருத்துவம் என்பது ''தன்னையே பலியாக்கும் ஓர் சுயமறுப்பு" என்ற பரிமாணத்தை இயேசுவின் குருத்துவம் இவ்வுலகிற்கு அறிமுகம் செய்திருக்கின்றது. இயேசுவின் மனித அவதாரம் இக்குருத்துவத்தின் முக்கிய கூறாக அமைந்துள்ளது. இவ்வாறு மனிதருடன் பகிரப்பட்ட குருத்துவத்தை, பலியாவதன் மூலமே முழுமையடையச் செய்ய முடியும். அக்குருத்துவத்தின் பணி நிலைகளை சற்று நோக்குவோம்.

**பணிக்குருத்துவம் :**

திருப்பட்டங்கள் வழியாக, குருக்கள் பெறும் குருத்துவத்தை பணிக்குருத்துவம் என்று நாம் கூறுகின்றோம். இயேசு தாம் பாடுபடுவதற்கு முன்பு ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறி, திருத்தூதர்களையும் அவர் தம் வழித் தோன்றல்களையும் ஏற்படுத்துகின்றார். இவ்வாறு இயேசு தமது குருத்துவத்தில் நம்மைப் பங்கு பெறச் செய்கின்றார்.

**''பணி விடை பெறுவதற்கு அன்று**
**பணி விடை புரியவே வந்தேன்"**

என்ற இயேசுவின் அறிவுரைக்கு ஏற்ப, மக்கள் வாழ்வு பெற, மக்களுக்காக பணி வாழ்வை மேற்கொண்டு, மறு கிறிஸ்துவாக வாழ்வதே பணிக்குருத்துவம். பணிக்குருத்துவம் என்பது பணி செய்யும் அருள் நிலை.

**பணிக்குருத்துவத்தின் பல்வேறு பணிநிலைகள் :**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்குப் பணிக்குருத்துவத்தின் மூன்று பணிநிலைகளைத் தெளிவுபடுத்துகின்றது. இவைதான் இயேசு ஆற்றிய முப்பெரும் பணிகள்.

1. **இறைவாக்குப் பணி, 2. புனிதப்படுத்தும் பணி, 3. வழி நடத்தும் பணி.** இந்த முப்பெரும் பணிகளை இவ்வுலகில் தொடர்ந்து செய்யத்தான் குருக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். இந்த முப்பெரும் பணிகள்தான் பணிக்குருத்துவத்தின் பரிமாணங்கள்.

**I. இறைவாக்குப் பணி :**

இறைவாக்குப் பணி என்பது, இறைவார்த்தையை அச்சமின்றி மக்களுக்கு அறிவிக்கும் பணி.

**பழைய ஏற்பாட்டில்,**

*இந்த இறைவாக்குப் பணியை செய்தவர்கள் இறைவாக்கினர் என்று அழைக்கப்பட்டனர்.

*இறைவாக்கினர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள்.

*ஆவியாரால் புனிதமாக்கப்பட்டவர்கள்.

*இறைவன் சார்பாக மக்களிடம் சென்று, இறைவனது வார்த்தையை அறிவித்தவர்கள்.

*மக்களை மனமாற்றத்திற்கு அழைத்துச் சென்றவர்கள்.

**புதிய ஏற்பாட்டில்,**

*இயேசு ஆற்றிய முப்பெரும் பணிகளில் முதன்மை இடம் பெறுவது இறைவாக்குப் பணியாகும்.

*இயேசு ஊர் ஊராகச் சென்று போதித்தார்

*இயேசு எல்லா இடங்களிலும் போதித்தார் (வீடுகளில், ஆலயங்களில், செபக் கூடங்களில், மலையடிவாரத்தில், சமதளத்தில்)

இயேசு அதிகாரத்தோடும், வல்லமையோடும் போதித்தார்.

இயேசுவின் இறைவாக்குப் பணி, மக்களை மையப்படுத்திய பணியாக அமைந்திருந்தது. குறிப்பாக எளிய மக்களை, அதாவது சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களை மையமாகக் கொண்டு அமைந்தது.

சமுதாயத்தில் : ஒதுக்கப்பட்ட பாவிகள், தாழ்த்தப்பட்ட சமாரியர்கள், பழித்துரைக்கப்பட்ட தொழுநோயாளிகள், வெறுக்கப்பட்ட ஆயக்காரர்கள் போன்ற மக்களின் நல்வாழ்விற்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்தார். இயேசு இந்த மக்களை ஏற்றுக் கொண்டார், அன்பு செய்தார், அவர்களின் உரிமைகளுக்காகப் போராடினார்.

இயேசு சமுதாயத்தில் நிலவிய அநீதிகளையும், அக்கிரமங்களையும், தட்டிக் கேட்டார்.

குற்றம் செய்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைக் கடிந்து பேசினார். ஏழைகளை அடிமைப்படுத்திய பணக்காரர்களைக் கண்டித்தார்.

ஆகவேதான் இயேசுவின் இறைவாக்குப் பணியை மறைநூல் அறிஞரும், பரிசேயரும் பெரிதும் எதிர்த்தார்கள். அவரை எப்படியாவது கொன்றுவிட கங்கணம் கட்டினார்கள். அவர் மீது அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவ்வாறு அவரது இறைவாக்குப் பணிதான் அவரது மரணத்திற்கு காரணமாய் இருந்தது.

சிலுவையில் இறந்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த பின் தமது திருத்தூதர்களுக்குத் தோன்றி, அவர்களிடம் ''நீங்கள் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள் விசுவசிப்பவர்களுக்கு திருமுழுக்கு கொடுங்கள்" என்று கூறி நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்புகிறார். ''தந்தை என்னை அனுப்பியதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறி அவர்களை இறைவாக்குப் பணி செய்ய அனுப்புகின்றார்.

**குருக்களும் இறைவாக்குப் பணியும் :**

நற்செய்தியை அறிவிக்கும் பணியானது, இயேசுவில் திருமுழுக்குப் பெற்ற எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட பணி என்றாலும் பணிக்குருத்துவத்தில் பங்கு பெறும் குருக்களின் முக்கியமான முதன்மையான பணியாகும்.

குருத்துவ திருநிலைப்பாட்டின் போது ஆயர்,

**''நீர் வாசிப்பதை விசுவசிக்கவும் விசுவசிப்பதை போதிக்கவும் போதிப்பதை கடைப்பிடிக்கவும் கருத்தாய் இரும்"**

என்று கூறி இறைவாக்குப் பணியின் முக்கியத்துவத்தை எடுத்து கூறுகின்றார். எனவே குருக்களாகிய நாம் இறைவார்த்தையில் வளர்ந்து பிறரும் இறைவார்த்தையில் வளர உதவ வேண்டும். பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்களைப் போன்று, நாமும் இறைவார்த்தையை எத்தகைய அச்சமுமின்றி அறிவிப்பது நமது கடமையாகும். புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் போல், நாமும் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு கொடுப்பதிலும், இறைவாக்குப் பணி அமைய வேண்டும். நாம் அறிப்பது இறைவார்த்தையாக இருக்க வேண்டுமே ஒழிய, மனித வார்த்தையாக அமைந்துவிடக் கூடாது. இன்றைய மனித வாழ்வுக்கு தேவையான வார்த்தைகளை இறைவன் இன்று பேசிக் கொண்டே இருக்கின்றார்.

**புனிதப்படுத்தும் பணி :**

கடவுள் மனிதரைத் தமது சாயலாகப் படைத்தார். ஆனால் மனிதர் பாவம் செய்து, கடவுளின் அன்பை மறந்து படைத்த கடவுளின் உறவிலிருந்து மாத்திரம் அவர் விலகிச் செல்லவில்லை. மனித உறவுகளிலிருந்தும் விலகிச் சென்றார். எனவே பாவத்தினால் மனிதருக்கும் கடவுளுக்கும், மனிதருக்கும் மனிதருக்கும் உள்ள உறவில் விரிசல், முறிவுகள் ஏற்பட்டன. உறவின் முறிவுதான் பாவம். இவ்வாறு உறவுகளிலிருந்து பிரிந்து சென்ற மனிதர் [illegible] வனைத் தேடுவதற்கு முன்பே அவர், கடவுள் மனிதரைத் தேடி வருகின்றார். காணாமல் போன ஆடு, காணாமல் போனக் காசு, காணாமல் போன மகன் போன்ற உவமைகள் எவ்வாறு கடவுள் மனிதரைத் தேடி வருகின்றார் என்பதைக் காட்டுகின்றன. உறவ்வ திரும்பவும் நிலைநாட்ட தமது மகனையே இவ்வுலகிற்கு அனுப்புகின்றார். மகன் இயேசுவும் மக்களின் மீட்புக்காக தமது உயிரைக் கொடுத்து, தமது இரத்தத்தினால் மனிதரைப் புனிதப்படுத்தினார்.

இவ்வாறு மக்களைப் புனிதப்படுத்தி, மக்களை இறைவனோடு இணைக்கும் பணிதான் புனிதப்படுத்தும் பணி; மக்களைப் புனிதப்படுத்தி மக்களை மக்களோடு இணைக்கும் பணிதான் புனிதப்படுத்தும் பணி.

**குருக்களும் புனிதப்படுத்தும் பணியும் :**

இயேசு செய்த இந்த புனிதப்படுத்தும் பணிகளைத் தொடர்ந்து செய்ய குருக்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். மக்களை புனிதப்படுத்தும் பணியில் ஈடுபடுமுன் குருக்களாகிய நாம் முதலில் நம்மையே புனிதப்படுத்த வேண்டும். புனிதத்தின் அடையாளமாக நாம் வாழ வேண்டும். அருட்சாதனங்களை நிறைவேற்றுவதின் மூலமாக குறிப்பாக நற்கருணை, ஒப்புரவு அருட்சாதனங்கள் வழியாய் குருக்களாகிய நாம் நம்மையும் புனிதப்படுத்துகின்றோம். மக்களையும் புனிதப்படுத்துகின்றோம்.

திருமுழுக்கு என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் மக்களை இறைவனது பிள்ளைகளாக்குகின்றோம். திருச்சபையின் உறுப்பினர் ஆக்குகின்றோம்.

ஒப்புரவு என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் கிறிஸ்துவின் பெயராலும் திருச்சபையின் பெயராலும் பாவங்களை மன்னிக்கின்றோம்.

உறுதிப்பூசுதல் என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் பரிசுத்த ஆவியானவரின் கொடைகளையும், வரங்களையும் மக்களுக்கு அளிக்கின்றோம்.

நற்கருணை என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் மக்களுக்கு ஆன்மீக உணவாகக் கொடுக்கின்றோம்.

**III. வழி நடத்தும் பணி (மேய்ப்புப் பணி)**

**பழைய ஏற்பாட்டில்,**

மக்கள் இறைவனை ஒரு மேய்பராகக் கண்டார்கள்.

**''நானே என் மந்தையை மேய்த்து இளைப்பாறச்செய்வேன்"** (எசே. 34:15), என்கிறார் தலைவராகிய ஆண்டவர். இஸ்ராயேல் மக்கள் கடவுளை வழிநடத்திச் செல்லும் தெய்வமாகத்தான் பார்த்தார்கள்.

**புதிய ஏற்பாட்டில்,**

மக்கள் இறைவனை ஒரு மேய்ப்பராகத்தான் கண்டார்கள்.

**''நானே நல்ல ஆயன். நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக தன் உயிரையே கொடுப்பார்"** (யோவா.10:1)

இயேசு தமது சிலுவையைச் சாவின் வழியாய் காட்டிய வழி: அன்பின் வழி, தியாகத்தின் வழி, இறையரசை அடைவதற்கான வழி. இயேசு மக்கள் செல்ல வேண்டிய வழியைச் சுட்டிக் காட்டியது மட்டுமல்லாது, இயேசுவே மக்களோடு சேர்ந்து பயணமாகிறார்.

இன்றைய சமுதாயத்தில் நாம் பார்ப்பது என்ன? பதவிக்காகவும், புகழுக்காகவும் அதிகாரத்திற்காகவும் வாழ்கின்ற தலைவர்களைப் பார்க்கின்றோம்.

இத்தகைய தலைவர்களைப்போல் இயேசு பதவிக்காகவோ, புகழுக்காகவோ, அதிகாரத்துக்காகவோ வாழாமல் பிறருக்காகத் தன்னையே கையளிக்கின்றார். கடவுளின் மகனாக இருந்தும், அவர் பிறருக்காக, அடிமை போல் வாழ்ந்தார். ஏழையாகப்பிறந்தார். ஏழையாகவே வாழ்ந்தார். ஏழையாகவே இறந்தார்.

இவ்வாறு தனக்கென்று வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார், உயிர் துறந்தார். குருக்களாகிய நாம், நமக்கென்று வாழாது பிறருக்காக வாழ்ந்து, பிறரை வழிநடத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**குருக்களும் வழி நடத்தும் பணியும் :**

வழிநடத்தும் பணி ஓர் அதிகாரப் பணி அல்ல. மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பணியல்ல. மக்களை அடக்கி ஆளும் பணியல்ல. குருக்களாகிய நாம், மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள் அல்ல. குருக்களாகிய நாம் மக்களை அடக்கி ஆள்பவர்களல்ல. ஒரு காலத்தில் திருச்சபை ஓர் அதிகார அமைப்பாய் இருந்தது. குருக்களும் திருச்சபையில் அதிகாரிகளாய் தான் இருந்தார்கள். இன்று நாம் திருச்சபையை எப்படிப் பார்க்கின்றோம்! ஓர் அன்புச் சமூகமாகத்தான் பார்க்கின்றோம். திருச்சபை ஓர் உறவுக்குடும்பம். எனவே, வழிநடத்தும் பணி ஓர் அன்பின் பணி. எனவே குருக்களாகிய நாம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்பினால் வழி நடத்த அழைக்கப்பட்டுள்ளோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக நாம் நம் உயிரையும் கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

நல்லாயன் இயேசு மக்களுக்காக சிலுவையில் உயிர் கொடுத்தாரே.

மெழுகுதிரியானது தன்னையே கரைத்துக் கொண்டு .... இதுதான் வழி நடத்தும் பணியாகும்.

இறுதியாக குருக்களாகிய நாம் அனைவரும், இயேசுவைப் போன்று எல்லா மக்களையும் வழிநடத்த அழைக்கப்பட்டுள்ளோம் என்றாலும் குறிப்பாக

ஏழைகள் ஒடுக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர், வலுவற்றவர்களான இவர்களை வழிநடத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சிறப்பாக, திசைமாறிய பறவைகள்போன்ற இளைஞர், யுவதிகளை வழிநடத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**முடிவுரை :**

குருத்துவத்தோடு ஒட்டிநிற்கும் முப்பணிகளும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருளை சுமந்து நிற்கிறது. இன்று பொய்மைகளே நீதிமன்றங்களை நிறுவும்போது, உண்மையின் குரலொலியாக இறைவாக்குரைக்கும் பணி, சிலுவைகளைத் தருவது இயற்கையே. தனிமனித - சமூக பாவங்கள் மனித நாகரீகமாக அங்கீகாரம் பெற்றுவிட்ட இன்றைய காலச் சூழலில் தூய்மையான வாழ்வுக்குக் குருத்துவம் உலகை அழைப்பது என்பது, சவாலானதே. அது இயேசுவின் பாடுகளை ஒத்தது. அதிகார பீடங்களை அலங்கரிப்போரின் கொலை வெறியும், அதிகார திமிரும், பசுத்தோல் போத்த வெளிவேடத்தனமும் மக்களை வழிநடத்தும் தலைமைகளின் பயங்கரமான வெற்றிடத்தை இன்று காட்டுகிறது. இந்நிலையில், குருத்துவத்தின் வழிநடத்தல் பணி இயேசுவின் மரணத்தை ஒத்ததே.

ஒவ்வொரு குருவும் இந்தப் பணி நிலைகளை உண்மையாகவே வாழ முனைந்தால் மட்டுமே - இயேசுவின் உயிர்ப்பின் சாட்சிகளாக முடியும். இக்குருக்கள் ஆண்டின் நிறைவு இதையே எமக்கு நினைவுபடுத்துகிறது. இச்சாட்சிய வாழ்விற்கு ஒவ்வொரு குருவும் தன் தனிப்பட்ட வாழ்வை சுயமதிப்பீடு செய்வதும், புதுப்பித்துக் கொள்வதும் மிக இன்றியமையாத - முதல்தர - அவசர தேவையாகிறது. இதுவே பலியாகும் குருத்துவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களோடு ஒப்பிட்டுத் தியானித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை அன்றைய நாளின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு சிந்தித்தால் இறைவார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் இறை அன்பை நன்றாகச் சுவைக்க முடியும்.

## (பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு)

1அர.19:16, 19–21, கலா. 5:1, 13–18, லூக் 9: 51–62

இயேசுவின் சீடராக விளங்குபவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் ஒன்று ''விட்டுக் கொடுத்தல்'' என்பதை இன்றைய முதல் வாசகமும், நற்செய்தியும் நமக்குத் தெளிவாக்குகின்றன.

ஒருவன் நூற்றுக்கு நூறு கடவுளுடைய சீடனாக விளங்கவேண்டும் என்ற ஆசையில் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்றான்.

காட்டுக்குள்ளே தவம் செய்து கொண்டிருந்த முனிவரை அணுகி: கடவுளின் சீடனாக என்ன செய்ய வேண்டும்? என்றான். அதற்கு முனிவர்: நீ எதையும் எடுத்துவராமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வா, நீ கடவுளின் சீடனாகலாம் என்றார்.

வீட்டுக்குச் சென்றவன் திரும்பி வந்தான். வரும்போது 10 பொற்காசுகள் அடங்கிய பை ஒன்றை எடுத்துவந்தான். முனிவர் எதுவும் கொண்டுவர வேண்டாம் என்று சொன்னேனே என்றார். அதற்கு அவன்: நான் எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். ஆபத்திற்கு உதவுமே என்று இந்த பத்து பொற்காசுகளையும் கொண்டுவந்தேன் என்றான்.

### இறைவனுக்கே முதலிடம்

அதற்கு முனிவர்: அதோ ஆறு தெரிகிறதே, அந்த ஆற்றுக்குள் இந்தப் பையை எறிந்துவிட்டுவா என்றார். சீடனாக விரும்பிய மனிதன், ஆற்றங்கரைக்குச் சென்று ஒவ்வொரு காசாக எடுத்து, அதைச் சற்றுநேரம் பார்த்த பிறகு தண்ணீருக்குள் எறிந்து கொண்டிருந்தான்.

அதை பார்த்துக் கொண்டிருந்த முனிவர் அவனிடம் சென்று: இன்னும் 8 காசுகள் இருக்கின்றன. அதை எடுத்துக் கொண்டு விட்டுக்குப்போ. நீ காசை விட்டுவிட விருப்பமாக உள்ளாய். ஆனால் காசுமீதுள்ள ஆசையை விட்டு விடத்தயாராக இல்லை. அந்த ஆசையையும் விட்டுவிட்டு வா. நீ கடவுளின் சீடனாகலாம் எனச் சொல்லி அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

எந்தப் படைப்பும் பொருள்மீதும் பற்று வைக்காமல் இறைவன் மீது மட்டும் பற்றுவைத்து அவரை மட்டும் தன் வாழ்வின் நடுநாயமாகக் கொண்டாடத் தயாராக இருப்பவரே கடவுளின் உண்மையான சீடர்.

எலிசா அழைக்கப்பட்டபோது அவர். உடனே மாடுகளை விட்டுவிட்டு எலியாவைப் பின் சென்றார். (1அர. 19:20) என்று முதல் வாசகத்தில் படிக்கின்றோம். நற்செய்தியில் இயேசு ஒருமுறை கடவுளைப்பின்பற்ற முடிவு எடுத்தபின் ஒருபோதும் (லூக் 9:62) பின்னால் திரும்பிப்பார்க்க வேண்டாம் என்கிறார்.

பெற்றோரா இல்லை பொற்றோரைப் படைத்த இறைவனா என்னும் போராட்டம் ஒன்று எழுந்தால் அதில் இறைவனுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிறது இன்றைய நற்செய்தி.

இப்படி இறைவனுக்கு முதலிடம் கொடுப்பதால் ஏற்படும் நன்மை என்ன? கடவுளைத் தன் வாழ்வின் அச்சாணியாக ஒரு மனிதன் கருத்துவங்கும் போது அம் மனிதன் எல்லா மனிதர்களையும் கடவுளின் குழந்தைகளாகப் பாவித்து அனைவரையும் அன்பு செய்யத் துவங்குவான் (கலா. 5:13-18).

நான் இறைவனுக்கு அடிமை என்று சொல்லும் எந்த மனிதனும் அன்புக்கு நான் அடிமை என்று சொல்லத் தவறுவதில்லை. காரணம், அன்பே கடவுள் (1யோவா 4:8). இதுவே நமது செபமாக இருக்கட்டும்:

**''இறைவா**
**நான் எதற்கு என் மதிப்பீட்டுப் பட்டியலில்**
**முதலிடம் கொடுக்க வேண்டுமோ**
**அதற்கு முதலிடம் கொடுக்க,**
**ஞானத்தையும், விவேகத்தையும் தாரும்!**
**உமக்கே முதலிடம் என்று நான் அறிந்த பிறகு**
**உமக்கு மட்டுமே நான் அடிமை**
**என வாழ எனக்கு**
**உண்மையான சுந்திரத்தை இன்று தாரும்!**
**ஆமென்.''**

## (பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு)

எசா. 66:10–14, கலா.6:14–18, லூக். 10:1–12, 17–20

எசா.66:13ல் கடவுள் ஓர் அருமையான வாக்குறுதியை நமக்குத் தருகின்றார்: ஒரு தாயைப்போல் நான் உன்னை அள்ளி அரவணைப்பேன்! ஒரு தாயின் அன்பைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும்! கண்களை விளக்காக்கி, கைகளைத் தொட்டிலாக்கி, குருதியை அமுதாக்கி, இரவெல்லாம் பகலாக்கி நம்மை வளர்ப்பவள் நமது தாய். ஊரெல்லாம் உறங்கயிலே ஒருத்தி மட்டும் விழித்திருப்பாள்! அவள்தான் தாய்!

ஓர் அன்னையைப் போன்று நம்மை அன்பு செய்யவும் இறைவனின் அன்பைப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன?

கடவுள் இன்று தரும் கட்டளையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். கடவுளின் கட்டளை லூக்10:9-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. உலகெங்கும் சென்று இறையாட்சி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்.

### நாம் கடவுளின் அருளைப்பெற என்ன செய்யவேண்டும்

இறையாட்சி என்றால் என்ன? விளக்கம் உரோ.14:17ல் உள்ளது. நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றில் இறையாட்சி அடங்கியிருக்கிறது.

நடுநாயகமாக விளங்குகின்ற அமைதியைப்பற்றி சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம்.

கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிக்க நினைப்பவர்கள் அனைவரும் அமைதியின் தூதர்களாக விளங்க முன்வரவேண்டும் அமைதி எப்பொழுதும் நம் நடுவே துளிர்விடும்.

இதனால் தான் இரண்டாம் வாசகத்தில் கலா.6:16-ல் உங்களிடம் அமைதியிருந்தால் இயேசுவின் அருள் உங்களுக்குக் கிட்டும் என்கிறார் புனித பவுல். இன்றைய உலகச் சூழ்நிலை எப்படியிருக்கிறது? எத்தனையோ வீடுகளில் கணவன், மனைவி நடுவே அமைதி இல்லை. கணவன், மனைவி சண்டையிட்டு வாழ்வதால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகள் பாதிக்கப்படும்போது எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. எதிர்காலம் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா?

நடந்தது நடந்ததாக இருக்கட்டும்! இனி நடக்கப்போவது நல்லதாக இருக்கட்டும்.

தூசி படிந்த வீணையைக் கலைஞன் விட்டுவிடுவதில்லை! தூசியைத் தட்டிவிட்டு வீணையை எடுத்து மீட்டுகிறான். உலகைப் படைத்த கலைஞன் கடவுள். நமது உள்ளம் அதன்மீது சுயநலம் என்னும் தூசி படிந்திருக்கலாம். ஆனால் கடவுள் அந்நத் தூசியைத் தட்டிவிட்டு நம்மை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்.

நமது இதயத்தில் படிந்திருக்கும் தூசியைத் தட்டிவிட இறைவனுக்குச் சுதந்திரம் அளிக்க இன்று முன் வருவோமா?

வருவோம் என்றால், இதோ இந்த மக்கள் எனது கட்டளையைப் பின்பற்ற முக் வருகிறார்கள். ஆகவே நான் அவர்கள் ஆசையை நிறைவேற்றி வைப்பேன் எனச்சொல்லி, நம்மீது இயேசு அருளுக்கு மேல் அருளையும். வாழ்வுக்கு மேல் வாழ்வையும் பொழிந்திடுவார்.

# யாழ். மறைமாவட்ட இளையோர் எழுச்சி ஒன்றுகூடல்
## உங்கள் பார்வைக்கு

"இளையோரே எழுக! இறையாட்சி அமைக்க!" எனும் விருது வாசக முழக்கமுடன் யாழ் மறைமாவட்ட இளையோர் எழுச்சி கொண்ட நாள் அந்தநாள். "எமது திருச்சபையின் விசுவாசமும், வாழ்வும் இன்றுவரை வழிநடந்ததை விட இனிவரும் காலங்களில் இன்னும் எழுச்சியுடனும் ஈடுபாட்டுடனும் பொறுப்புக்களை மனமுவந்து மனத்தைரியமுடன் ஏற்று ஒற்றுமையுடன் செயற்படுத்த இயற்கையை நண்பனாகவும், நவீன தொழில் நுட்பங்களை ஊடகமாகவும் இணைத்து செயற்படுத்தி ஆயருக்கும், குருக்களுக்கும் விசுவாசமுள்ள தோழர்களாக வழிநடத்திட யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு பதிவிலிருந்து எமது மறைமாவட்டத்தின் பங்குகள் தோறும் இருந்து பிரதிநிதிகளாக வருகை தந்த 400 வரையான இளையோர்கள் இந் நிகழ்வை அலங்கரித்தனர்.

யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 30.05.2010 ஞாயிற்றுக் கிழமை யாழ் அடைக்கல அன்னை வித்தியாலய மண்டபத்தில் காலை 9.35 மணிக்கு வணக்கத்திற்குரிய யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் வரவேற்கப்பட்டார். தொடர்ந்து அவர் தலைமையில், யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் யாழ் மறைக்கோட்ட இணைப்பாளர் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும் மற்றும் இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தின் இணைப்பாளர் அருட்பணி புனிதகுமார் அடிகளாரும் இணைந்து விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் அவர்கள் தனது மறையுரையில் "யுத்த காலத்தின் போது எமது இன்றைய இளைய சமூகம் மனதாலும், உடலாலும், தொழில் நிலையிலும், திருச்சபையின் பணிகளிலும் பின்தங்கிய சூழ்நிலையில் காணப்பட்டனர். யுத்த மேகங்கள் கலைந்து அவலச் சத்தங்கள் தணிந்துள்ள இன்றைய சூழ்நிலையில் இளையோர்கள் பொறுப்பற்றவர்களாக அல்லாமல் சமாதான விரும்பிகளாக பொறுப்புக்களை சரிவரச் செய்ய முன்வரவேண்டும், உழைக்க வேண்டும்" என இளையோரை அழைத்திருந்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் வரவேற்புரையினை யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியச் செயலாளர் செல்வி ச. றொசானி நிகழ்த்தியிருந்தார். தொடர்ந்து தலைமையுரையினை யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தலைவர் செல்வன் பெனற் றொசாய்றோ நிகழ்த்தினார். அவர் தனதுரையில், "எமது சமூகத்திலும், திருச்சபையிலும் இளைய சமூகம் பெறுமதிமிக்கவர்கள். அப்பெறுமதியை உணர்ந்தவர்களாக தவறானவற்றைக் களைந்து, எந்த விடயத்திலும் எப்பொழுதும் அனைவருக்கும் நன்மைகளை விளைவிக்கும் இளையவர்களாக இருக்க வேண்டுமென்றும், இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைவர்களே என்பதை யாவரும் நினைவில் கொள்ள வேண்டும்" என்றும் வலியுறுத்தியிருந்தார். தொடர்ந்து யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநரின் செய்தி யாழ் மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இபக்குநரால் வாசிக்கப்பட்டது. அதில் இளையோரே! உங்கள் முன்னால் உள்ள சவால்கள் பல. சிதைந்து போன தேசமொன்று உங்கள் கரசேவைக்காகக் காத்துக் கிடக்கின்றது. கரங்கள் இழந்தவராய் இயேசு உங்களை தன் கரங்களாய்ச் செயற்பட அழைத்து நிற்கின்றார். அழுவோரைத் தேற்றவும், அரவணைக்கவும், சிதைகின்ற சமூகத்தைத் தூக்கி நிறுத்தவும், கலைகளையும், பண்பாட்டையும் மீள உருவாக்கவும மொத்தத்தில் இறையாட்சி சமூகமொன்றை இந்த மண்ணில் மலரச் செய்யவும் திருச்சபைத் [illegible] நிற்கின்றாள் [illegible]



செய்தியில் இருந்து வாசிக்கப்பட்டதை காணக்கூடியதாக உள்ளது. தொடர்ந்து மறைமாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கிளித்தட்டு, கரப்பந்தாட்டம், குழுப்பாடல், நாடகம் மற்றும் சஞ்சிகைப் போட்டிகளில் வெற்றி பெற்ற இளையோர் மன்றங்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும், கேடயங்களும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரம் ஆண்டகை அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து யாழ் நாவாந்துறை றோ.க. வித்தியாலய அதிபர் F.X. அன்ரன் தலைமையில் கருத்துரைகள் இடம்பெற்றன. அவர் தனது அறிமுக உரையில் "இளைஞர்கள் மாற்றங்களை விரும்புபவர்களாகவும், மாற்று வழிகளைச் சிந்திப்பவர்களாகவும் வளர வேண்டும்" எனக் கூறியிருந்தார். அடுத்து யாழ் மேல் நீதிமன்ற சட்டத்தரணி திரு. ஜோனி அவர்கள் சமூகத்தில் இளைஞரின் நன்மை, [illegible]டைவு, பொறுப்புக்கள் [illegible] கருத்துக்களைப் பரிமாறி இளைஞர்களை சமூக நீரோட்டத்தில் விழிப்படையச் செய்தமை பாராட்டுக்குரியது.

பின்பு அருட்பணி ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி.) அவர்கள்" இறையாட்சிப் பணியில் இளையவர்கள் முதுகெலும்பாக இருக்க வேண்டும். காரணம் இன்று எமது திருச்சபையின் பணியின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அர்த்தங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு அவற்றை ஏற்க மறுத்து பிரிந்து சென்று தூசித்து வரும் பிரிவினை சபையினரின் கருத்துக்களுக்குப் பணிந்து விடாமல் தமது கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்து நிற்கும் இளையவர்கள் ஆசீக்குரியவர்கள். அதேவேளை தவறான போதனைகளுக்கு முகம் கொடுத்துத் திருச்சபையையும், இறைபணியையும் காத்துக் கொள்ள ஒற்றுமையுடனும் இறை தைரியத்துடனும் செயற்பட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்திருந்தார். தொடர்ந்து மறைக்கோட்ட ரீதியான போட்டிகளில் வெற்றி பெற்ற இளையோர்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையின் இரு பெரும் தூண்கள் தூய பேதுருவும் தூய பவுலும்

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

திருச்சபை என்பது இறைமகன் இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, அவருடைய வார்த்தை களை வாழ்வாக்க, அவர் பெயரால் திருமுழுக்குப் பெற்று வாழும் இறை மக்கள் கூட்டமாகும். இயேசுவில் நம்பிக்கை கொண்டு, அவருடைய வார்த்தையில் நிலைத்தவராகவும், அதை வாழ்ந்து காட்டுபவராகவும், தூய ஆவியானவரால் வழிநடத்தப்பட, தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராகவும் விளங்குபவர்தான் இயேசுவின் உண்மைச் சீடர், அவரது அன்புத் திருச்சபையின் உறுப்பினர். இயேசு எதிர்பார்த்த சீடத்துவ தகமை, "என் வார்த்தைகளை நீங்கள் கடைப்பிடித்து வந்தால் என் சீடர்களாய் இருப்பீர்கள்"(யோவான் 8:31). கடவுளோடும் மனிதரோடும் அன்புறவில் நிலைத்திருந்து தான் பெற்ற இறையனுபவங்களை பிறரோடு பகிர்ந்து கொள்பவர் சீடர். நன்மையான செயல்கள் அனைத்தும் இறைவனுடைய அன்புச் செயல்கள் என்பதை ஏற்று, உணர்ந்து அதை பிறருக்கும் உணர்த்துவதன் மூலம் இறைவனை மகிமைப்படுத்துபவரே இயேசுவின் உண்மைச் சீடர். தங்களுடைய இவ்வுலக வாழ்விலே இறைவனின் அழைப்பை ஏற்று, தம்மை இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்து, அவரது பணியை இவ்வுலகில் முன்னெடுத்துச் சென்று, அவரால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையை வழிநடத்திய உன்னத திருத்தூதர்கள்தான் தூய பேதுருவும், தூய பவுலும் இதனால்தான் இவர்கள திருச்சபையின் இரு பெரும் தூண்கள் என்று போற்றப்படுகிறார்கள்.

இவ்விரு திருத்தூதர்களுடைய வாழ்வையும், பணியையும், அவர்கள் கொண்டிருந்த இயேசு அனுபவத்தையும், அர்ப்பண வாழ்வையும் ஆழமாக உற்று நோக்குவது, எமது இறையனுபவத்தை ஆழப்படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை. எந்த வொரு குழுவிற்கும், சமூகத்திற்கும் ஒரு தலைமைத்துவம் தேவை என்பதை நன்குணர்ந்த இயேசு ஆண்டவர், "நீர் மெசியா உயிருள்ள கடவுளின் மகன்" (மத் 16:16) என தனது விசுவாசத்தை வெளிப்படுத் திய பேதுருவை "என் ஆட்டுக் குட்டிகளை மேய்" (யோவா 21:16) என்று கூறி தமது திருச்சபையின் தலைவராக அவரின் நியமனத்தை உறுதிப்படுத்திச் சென்றார். தூய ஆவியின் வருகையின் பின் செயலூக்கம் பெற்ற பேதுரு தனது பணியில் களம் இறங்கி திருச்சபையை வீர நடையோடு வளர்த்தெடுத்தார் என்பதை திருத்தூதர்கள் பணிகள் நூல் எமக்கு விளக்கி நிற்கிறது. பேதுரு வின் விசுவாசம் தளராதிருக்க, அவர் தம் சகோதர சகோதரிகளை விசுவாசத்தில் உறுதிப்படுத்த அவருக்காக இயேசு தனிப்பட்ட முறையில் மன்றாடினார் (லூக் 22:32). பேதுரு சிறைவைக்கப்பட்ட போது திருச்சபை அவருக்காக கடவுளிடம் உருக்கமாக வேண்டியது (தி.ப 12:5). இவ்வாறு அனைத்திலும் தலைமைப் பொறுப்பை ஏற்று விசுவாத்தை அறிக்கையிடு வதில் தலைவராக திகழ்ந்தவர் தான் தூய பேதுரு.

திருச்சபையின் தலைவராகிய தூய பேதுரு அறிக்கையிட்ட விசுவாசத்தை தன்னில் உள்வாங்கி, தெளிவாகப் போதித்து, புறவின மக்களிடையே கிறிஸ்துவின் கருவியாக விளங்கியவர்தான் புனித பவுல். "உண்மையில் என்னைப் பொறுத்த மட்டில், என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுகிறேன்" (பிலிப் 3:8), என்ற வார்த்தையை தனது அடி உள்ளத்திலிருந்து மிக ஆதங்கத்தோடும், இயேசு அனுபவத்தோடும், தூய ஆவியானவரின் வழிநடத்துதலோடும், வாழ்வில் காட்டி, கிறிஸ்துவை உலக மாந்தர் அனைவருக்கும் எடுத்துரைத்த தலைசிறந்த போதகர்தான் தூய பவுல். "எனவே இனி வாழ்பவன் நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்.."(கலா 2:20) என்று கூறுமளவிற்கு கிறிஸ்து ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட தூய பவுலுடைய வாழ்வில் அவர் பல இன்னல்களைச் சந்தித்த போதும் அவருடைய இயேசு அனுபவம் தளம்பவில்லை என்பதனை நாம் அறிய முடிகிறது. வெறுமனே சிந்தனையாலும், உட்கிடையான முடிவுகளாலும், இயேசுவைப் புரிந்து கொண்டவரல்ல தூய பவுல். மாறாக அனுபவத்தை அடிப்படை யாகக் கொண்டு இயேசுவைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொண்டவர். மாறிவரும் மனித வாழ்வியல் சூழ்நிலைகளுக்கேற்ப, புதிய உண்மைகளை தனது கிறிஸ்து அனுபவத்திலிருந்து கண்டுகொண்டவர். மாற்றங்களை மனத்திற்கொண்டு, மறுக்க முடியாத உண்மைகளுக்கு மாறுபட்ட வடிவங்களைக் கொடுத்த பவுலுடைய வாழ்வில் இருந்து நாம் கற்றுக் கொண்டு, எமது கிறிஸ்து அனுபவத்தை இக்கால நிலையில் சிந்திப்பது எமது கடமையாகும்.

திருத்தூதர்கள் பேதுருவும், பவுலும் ஒரே நற்செய்தியைத்தான் போதித்தார்கள். ஆனால் வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு விதங்களில் எடுத்துரைத்தார்கள். பேதுரு கிறிஸ்துவின் இறைத்தன்மையை அறிக்கையிட்டார். அவரது விசுவாசம் என்கின்ற பாறையில்தான் திருச்சபையின் ஆட்சியமைப்பு கட்டப்பட்டுள்ளது (மத் 16:18). என் ஓட்டத்தை முடித்துக் கொண்டேன். என் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் (2திமோ 4:7) என்ற பவுலின் வார்த்தைகள் இயேசுவின் மீது நாம் கொண்டுள்ள விசுவாசமே எம்மை மீட்கவல்லது என்ற உண்மையை எமக்கு புலப்படுத்துகிறது. திருச்சபை தனது உயிருள்ள, தொன்மை வாய்ந்த மரபிற்கு பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும். அதே நேரத்தில் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப, காலத்தின் அறிகுறிகளை அறிந்து, புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு, மீட்பின் நற் செய்தியை இக்கால மக்களுக்கு ஏற்ற வகையில் எடுத்துரைக்க வேண்டும் என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள எமக்கு முன்னுதாரணமாக காட்சி தருகிறார் கள் தூய பேதுருவும், தூய பவுலும். திருச்சபையின் இரு பெரும் தூண்களாகிய இத்திருத் தூதர்களைப் போல ஆண்டவர் இயேசுவில் ஆழமான அன்பும், பற்றுறுதியும் கொண்டு, இயேசுவின் பணியை இவ்வுலகில் முன்னெடுக்க நாமும் புறப்படுவோம்.

# கிறிஸ்துவின் சீடரான பவுல்

ஆண்டவர் இயேசுவுக்கு அடுத்தபடியாக இளந்திருச்சபையில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தவர் தூய பவுல் என்றால் அது மிகையாகாது. அவருக்கு 'வேற்றினத்தாரின் திருத்தூதர்', 'பதின்மூன்றாம் திருத்தூதர்', 'திருத்தூதருள் பேராசிரியர்', 'ஐந்தாம் நற்செய்தியாளர்', 'முதல் இறையியலாளர்', 'கிறிஸ்துவ மறையின் (இரண்டாம்) நிறுவனர்', 'மறைஞானி' என்றெல்லாம் பல சிறப்புப் பெயர்கள் உண்டு. அதே நேரத்தில் 'எதிர் கிறிஸ்து', 'போலித்திருத்தூதர்', 'இயேசுவின் எளிமையான நற்செய்தியைத் திரித்து வழங்கியர்', 'கிறிஸ்துவ மறையை முதன் முதல் பெருமளவில் சீரழித்தவர்', 'பெண்களின் எதிரி' எனவும் அவர் வருணிக்கப்படுகிறார். பவுல் பன்முகம் கொண்டவர் என்னும் உண்மை இதிலிருந்து தெளிவாகிறது.

பவுலுடைய திருமுகங்களையும் அவற்றில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை முறையாகப் படிக்கின்ற பொழுது சீடத்துவத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த கண்ணோட்டத்தையும் கருத்தோட்டத்தையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். சீடத்துவத்தைப் பற்றி அவர் என்ன கூறுகிறார் என ஆய்வதற்கு முன்னர், அவர் எவ்வாறு கிறிஸ்துவின் உண்மையுள்ள சீடராக வாழ்ந்தார் எனப் பார்ப்பது சிறப்புடையதாக இருக்கும். இதுவே இக் கட்டுரையின் நோக்கம்.

### கிறிஸ்துவில் தடுத்தாட் கொள்ளப் பெற்றவர்

பவுல் வரலாற்று இயேசுவைப் பார்த்திருக்கக்கூடும்; ஆனால் யூதச் சட்டத்தை எதிர்த்தவராக, தம் எதிரியாக அவரைக் கருதியிருக்க வேண்டும்; ஏனெனில் அவர் திருச்சட்டத்தை மிகவும் போற்றி வந்தார்; விருத்த சேதனம், ஓய்வுநாள் உணவுச்சட்டங்கள் முதலியவற்றை முனைப்புடன் கடைப்பிடித்து வந்தார். திருச்சட்டம் விதிக்கும் செயல்களால் மட்டுமே மாந்தர் இறைவனுக்கு ஏற்புடையோர் ஆக முடியும், மீட்பை அடைய முடியும் என்று நம்பியிருந்தார்.

இக்கட்டத்தில் பவுலுக்கு உயிர்த்த கிறிஸ்துவுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்பு அவருக்குத் தன்னிகரில்லாத ஓர் அனுபவமாய் அமைந்தது. இது பற்றிய விளக்கம் திருத்தூதர் பணிகளில் மும்முறை இடம்பெறுகிறது. (தி.ப. 9:1-19; 22: 3-21; 26: 12-18) இந்நிகழ்ச்சியின் சிறப்பை உணர்த்த இதுவே போதுமானது. பவுல் இது பற்றி தம் மடல்களில் அரிதாக குறிப்பிட்டாலும், அதன் உட்பொருளைப் பல இடங்களில் இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்புகிறார்.

தாம் முன்பு கிறிஸ்துவின் அடியார்களைக் துன்புறுத்தியதன் மூலம் கிறிஸ்துவையே துன்புறுத்தியிருந்தாலும், பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களைப் போன்று கடவுள் தம்மையும் தடுத்தாட்கொண்டார் என விளக்குகிறார். (கலா1:15-16) இச்சந்திப்பு அவரது வாழ்வை முற்றிலும் மாற்றியமைத்து விட்ட ஓர் நிகழ்ச்சியாகும். சிலுவையில் அறையப்பெற்ற கிறிஸ்து இன்றும் உயிரோடு வாழ்கிறார். அவரே ஆண்டவர்; மீட்பின், வாழ்வின் ஊற்று அவர் இறைவனால் சபிக்கப்பட்டவர் அல்ல; மாறாக திருச்சட்டத்தை நிறைவு செய்தவர் என்பதை அனுபவ வாயிலாக உணரலானார். இதனால் கிறிஸ்துவோடு உறவு கொள்வதை மட்டும் ஒப்பற்ற செல்வமாக கருதினார். (பிலி 3:7-11).

தமஸ்கு அனுபவம் என அழைக்கப்படும் இந்நிகழ்ச்சியின் தன்மை பற்றி பல வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. பவுல் கண்ட பல காட்சிகளும் ஒன்றாகவோ, வெறும் உளவியல் மாற்றமாகவோ இதைக் கொள்வதற்கில்லை. இது உண்மையில் நடந்த நிகழ்ச்சி என்பதில் ஐயம் இல்லை. பவுலின் வாழ்வில் ஏற்பட்ட முழுமையான மாற்றம் என இதைக் கொள்வது மிகவும் பொருத்தமாகும். இதைப் பவுலின் மனமாற்றம் எனத் திருத்தூதர் பணிகள் சித்தரிக்கின்றன. பவுலோ பிற இனத்தார்க்கு நற்செய்தி அறிவிக்கத் தாம் பெற்ற அழைப்பாகக் கருதுகிறார் (கலா 1:15-16).

இவ்வாறு பவுல் கிறிஸ்துவில் சீடர் ஆனார். கிறிஸ்துவின் பணியாளன், திருத்தூதன் என்றெல்லாம் தம்மை அழைத்துக் கொள்ளும் பவுல் கிறிஸ்துவின் சீடர் எனத் தம்மைக் குறிப்பிடுவதில்லை. இருப்பினும் அவரது மனமாற்றத்திற்குப் பின்னர் அவர் எருசலேம் நகரத்துக்கு வந்த போது சீடர்களுடன் சேர்ந்து கொள்ள முயன்றார். ஆனால் அவரும் ஒரு சீடர் என்பதை நம்பாமல் அனைவரும் அவரை கண்டு அஞ்சினர். (தி.ப. 9:26) என்னும் குறிப்பு காணப்படுகிறது.

### கிறிஸ்துவை தம் வயப்படுத்திக் கொண்டவர்

பவுல் உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்த பின்னர் ஏறத்தாழ பத்து ஆண்டு காலம் என்ன செய்தார் தெளிவாக தெரியவில்லை. தம் வாழ்விலே திருப்பு முனையாய் அமைந்திட்ட இந்த அனுபவம் பற்றித் தனிமையில் சிந்திக்க - தம்மை முற்றிலும் மாற்றியமைத்த இந்நிகழ்ச்சியின் [illegible] பீடுகள், பற் [illegible] மறு ஆய்வு செய்ய - தமது அழைப்பின் முழுப்பொருளையும் உணர்ந்து பார்க்க - தமது புதுப்பணியில் நேரக்கூடிய சிக்கல்கள் பற்றிக் தெளிவு கூற அவர் இந்தக் காலத்தை பயன் படுத்தியிருக்கக் கூடும். (கலா 1:17-21)

இக்காலத்தில் பவுல் யூதரிடமிருந்தும் யூதர் அல்லாதவர்களிடமிருந்தும் பல எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டியிருந்தது. கிறிஸ்துவின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் (தி.ப 9:16) என்பதை அவர் உணரவேண்டியிருந்தது. தோல்விகள் பலவற்றை அவர் தொடர்ந்து எதிர்கொண்டாலும் அவர் மனமுடைந்துவிடவில்லை. மாறாக பல சபைகளை சந்தித்தார். கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருந்த சகோதர சகோதரிகளிடமிருந்து மறையுண்மைகளை, கிறிஸ்தவ மரபுகளை, வரலாற்றுக் கிறிஸ்துவை பற்றிய பல உண்மைகளை அறியவந்தார். இவ்வாறு கிறிஸ்துவை தம்வயப்படுத்திக் கொண்டார்.

"பவுலின் இதயம் கிறிஸ்துவின் இதயம் என்பார்" தூய கிறிஸ்சோஸ்தம் யோவான். அந்த அளவுக்கு அவர் கிறிஸ்துவின் உள்ளத்தையும் எண்ணத்தையும போதனையையும் சாதனையையும் சரியாகப் புரிந்து கொண்டனர். அவரது வாழ்வில் கிறிஸ்துவே சிறப்பிடம் பெற்றிருந்தார். கிறிஸ்துவுக்கும் அவரால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற பவுலுக்கும் இடையே புது உறவு பிறந்தது. அது கிறிஸ்து மயமான முழுவதும் கிறிஸ்துமயமான உறவு. நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி. 1:21)

பவுல் எந்த அளவுக்கு கிறிஸ்துவை தம்மில் பிரதி பலித்தார் என்றால், கலாத்தியர் அவரைக் கிறிஸ்துவின் உண்மையான பிரதிநிதியாக மட்டுமல்ல, மறுகிறிஸ்துவாகவே ஏற்றுக்கொண்டார்கள். (கலா. 4:14) எனவே தான் கிறிஸ்துவோடு இரண்டறக்கலந்து விட்ட நிலையில் "இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20) என்று அவரால் கூற முடிந்தது. கிறிஸ்துவுக்கும் தமக்கும் இடையே நிலவிய உறவை முழுமையாக விளக்க 'கிறிஸ்துவில்', 'கிறிஸ்துவோடு', 'கிறிஸ்துவுக்குள்' ஆகிய தொடர்புகளை பயன்படுத்துகிறார். கிறிஸ்துவின் மீது உண்மையான உள்ளார்ந்த அன்பு உறவின்று பிரிந்து வாழ அவர் என்றுமே விரும்பியதில்லை. (உரோ 8:35-39)

### கிறிஸ்துவால் அனுப்பிவைக்கப் பெற்றவர்

[illegible] சொல், செயல் அனைத [illegible] பற்றியே வட்டமிட்ட


திருச்சபையின் இரு பெரும் தூண்கள்

வண்ணமாய் இருந்தன. ஆதலின் தாம் பெற்ற கிறிஸ்து அனுபவத்தைக் பிறருக்கு எடுத்துக் கூறாமல் இருக்க அவரால் முடியவில்லை. அவரைப் பொறுத்த மட்டில் அழைத்தலும் அனுப்பப்பட்டலும் ஒன்றே. (கலா 1:15-16)

நற்செய்திப் பணிக்கென ஒதுக்கிவைக்கப் பட்டிருந்த பவுல் (உரோ1:1) உரோமைப் பேரரசின் பல இடங்களுக்கும் சென்றார்; கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிராத இடங்களில் நற்செய்தி அறிவிப்பதைக் தம் தலையாய பணியாகக் கொண்டிருந்தார். (உரோ 15:20) போக்குவரத்து வசதிகள் மிக மிக குறைவாகவே இருந்த காலத்தில் தம்மால் எல்லையில் தொல்லைகள், எதிர்ப்புகள் ஆகியவற்றுக்கு நடுவில் (2கொரி 11:23-27) முப்பெரும் தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார்.

பவுல் பெரும்பாலும் நகரங்களையே நாடிச் சென்று நற்செய்திப் பணியாற்றினார் அங்கெல்லாம் கிறிஸ்துவின் சீடர்களை சிறு சிறு விசுவாச குழுக்களாக - சபைகளாக கட்டியெழுப்புவதிலும் அவர்களை ஊக்குவித்து, அறிவுறுத்தி, கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதிப்படுத்துவதிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்.

இவ்வாறு கிறிஸ்துவின் சீடரான பவுல் பலரை சீடராக்கினார்; கிறிஸ்துவைத் தம்வயப்படுத்தியவர். நற்செய்தி அறிவிப்புப் பணி வழியாக மக்களை கிறிஸ்துவயப்படுத்தி சீடத்துவத்தின் மாதிரி ஆனார்.

*நன்றி விவிலிய விருந்து*
*ஏப்ரல் 2003*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூலை மாதமும் யாழ் ஆயரின் சிறப்பும்

வருடாந்தம் "யூலை மாதம்" யாழ் மறைமாவட்ட மக்களுக்கும் அருட்பணியாளர்கள், துறவிகளுக்கும் மிக முதன்மையான பெருமகிழ்வு நிறைந்த ஒரு மாதமாக அமைகிறது. இம்மாதத்தை "தோமஸ் ஆண்டகையின் மாதம்" எனச் சொன்னால் அது மிகப் பொருத்தமாக இருக்கும். அருட்பணியாளர்களாக திருநிலைப் படுத்தப்பட்டு 47 வருடங்களைக் கடந்த நிலையிலும் ஆயத்துவ அருட்பொழிவைப் பெற்று 29 வருடங்களைக் கடந்த நிலையிலும் இறை பணியாற்றும் எம் அன்பிற்கும் பெரு மதிப்புக்கும் உரிய எமது ஆயர் மேதகு இம்மானுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யூலை மாதத்தில் மிக முக்கியமான நான்கு நிகழ்வுகளை மகிழ்வோடு நினைவு கூருகின்றார். ஆயர் தோமஸ் ஆண்டகை எனும் மாபெரும் கொடையை யாழ் மறைமாவட்டத் திற்கு தந்தமைக்காக அவருடைய இறையாட்சிப் பணிகளுடாக நாம் வழிநடத்தப்பட்டமைக்காகவும் மூவொரு இறைவனுக்கு நன்றியோடு புகழ் பாடுவதோடு இம் மாதத்தில் விஷேடவிதமாக நம் ஆயருக்காக இறைவேண்டல் செய்ய நாம் அழைக்கப்படுகின்றோம்.

**ஆயரின் பெயர் கொண்ட தினம் (யூலை 03)**

யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் புனித தோமையாரின் பெருவிழாவான யூலை மாதம் 03ம் திகதி தனது பெயர் கொண்ட புனிதரின் விழாவை (Feast) கொண்டாடுகின்றார். அன்றைய தினம் ஆயர் அவர்கள் மாணவர்களுக்கு சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுத்து அவர்களோடு இணைந்து இறைவனுக்கு நன்றியோடு புகழ் பாடுவது வழமையாகும் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் பாடசாலை கொடிகளை தாங்கி வர, பாண்ட் வாத்திய இசை முழங்க, இருமருங்கும் மாணவர்கள் அணிவகுத்துநிற்க, சககுருக்கள், ஆசிரியர்கள், ஆயரை பவனியாக அழைத்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் (லூக் 18:16) என்ற இறை வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து சிறுவர்களோடு தானும் மகிழ்ந்திருப்பது சிறுவர்கள் மீது அவர் கொண்டுள்ள அன்பிற்கும், அக்கறைக்கும் சான்றாகும்

**யாழ் மறைமாவட்ட ஆயராக நியமனம் (06யூலை 1992)**

யாழ் மறைமாவட்ட முன்நாள் ஆயர் அமரர் மேதகு வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருச்சபையின் சட்டங்களுக்கமைவாக தன்னுடைய 75வது அகவை நிறைவில் ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற போது, அப்போது மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த மேதகு தோமஸ் ஆண்டகை அவர்கள் யாழ் மறை மாவட்ட ஆயராக பரிசுத்த திருத்தந்தையால் நியமனம் பெற்றது யூலை மாதம் 06ம் திகதி ஆகும். இத்தினமும் ஆயருடைய இறையாட்சிப் பணிவாழ்வில் மிகமுக்கியமாகும். ஆயர் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தை 11 வருடங்கள் ஆயத்துவ பணிபுரிந்த பின் யாழ் மறை மாவட்டத்தை 18 வருடங்கள் கடந்தும் பணிபுரிகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஆயரின் பிறந்த தினம் (யூலை 13)**

மேதகு ஆயர் அவர்கள் தீவகம் ஊர்காவற்துறையை சொந்த மண்ணாகக் கொண்டார். 1933ம் ஆண்டு யூலைமாதம் 13ம் திகதி வரப்பிரகாசம இம்மானுவேல் தோமஸ் சவரியாச்சி தம்பதிகளுக்கு அன்பு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை ஊர்காவற்துறையிலும் 1953ம் வருடம் புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்து கொண்டபின் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார். தனது அருட்பணியாளனுக்குரிய பயிற்சியை கண்டி அம்பிட்டியா தேசிய குருமடத்தில் நிறைவு செய்து 21.12.1963 அன்று மறைந்த முன்நாள் ஆயர் அமரர் மேதகு ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையால் யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் குருத்துவ அருட்பொழிவைப் பெற்றார். யாழ் மறைமாவட்டத்தில் பேராலயம் உட்பட சில பங்குளிலும் அப்போது யாழ்மறைமாவட்டத்தின் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டிருந்த மன்னார் மறைமாவட்டத்திலும பங்கு குருவாக பணிபுரிந்ததோடு மறைக்கல்விக்கு பொறுப்பாக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். இந்தியாவின் பெங்களுரில் மறைக்கல்வியில் டிப்ளோமா பட்டத்தை பெற்றுக் கொண்டதோடு ரோம் நகர் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது ஆயராக அழைக்கப்பட்டார்.

**ஆயத்துவ திருப்பொழிவு (30 யூலை 1981)**

மன்னார் மறைமாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டபோது அம் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக 1981ம் ஆண்டு தைமாதம் 24ம் திகதி அருட்பணி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் மேதகு தோமஸ் ஆண்டகையாக நியமனம் பெற்றார். தூரநோக்கும், எதையும்




தாங்கும் இதயமும், நிதானமான சிந்தனைப்போக்கும், உறுதியான விசுவாசமும் கொண்ட அருட்பணி தோமஸ் அடிகள் 1981ம் ஆண்டு யூலை 30ம் திகதி இலங்கையின் மிகப்பெரிய யாத்திரைஸ்தலமான மடுத்திருப்பதியில் மேதகு ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**மனஉறுதியும் விசுவாசமும் கொண்டவர்**

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் தன்னுடைய 47 வருட (குரு, ஆயர்) இறையாட்சிப் பணிவாழ்வில் பெரும் துன்பங்களையும், சோகங்களையும் சந்தித்தவர். தன்னுடைய தனிப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் இழப்புக்களையும், தனக்கு கீழ் பணியாற்றிய குருக்களுடைய இழப்புக்களையும் சந்தித்திருந்தாலும் தன்னுடைய விசுவாசத்தை இழந்துவிடவில்லை மன்னார், யாழ் மறை மாவட்டங்களில் பல அருட்பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டும், காணாமல் போயிருந்தும் இறைதிட்டமென அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு தொடர்ந்தும் இறையாட்சிப் பணியுரியும் ஆயர் அவர்களை அவருடைய பெயர் கொண்ட தூய தோமையாரின் பாதுகாவலில் ஒப்படைப்போம். "நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்" (யோவான் 20:28) என்று விசுவாச அறிக்கையிட்ட புனித தோமையாரின் பரிந்துரையால் எம் அன்புக்குரிய ஆயர் தோமஸ் ஆண்டகை உடல், ஆன்மீக நலன் பெற்று பல்லாண்டு இறையாட்சிப் பணியாற்ற வாழ்த்துவதோடு தொடர்ந்தும் அவருக்காக செபிப்போம்.

**இ.அ.அமலரட்ணம்**
**பேராலயம்.**

---

## கார்மேல் அன்னையரின் அர்ப்பணத் தினம் குளமங்கால்



அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் உதவி அங்கத்தவர்களாக 05.06.2010 சனிக்கிழமை குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் தம்மை அர்ப்பணம் செய்துள்ளார்கள். இதன் ஆயத்தமாக அன்று காலை 9.00 மணிக்கு தியானமும் மன்னிப்பு அருட்சாதனமும் நற்கருணை வழிபாடும் அருட்பணி M.K.S. பிரான்சிஸ் C.M.F. அவர்களால் நடாத்தப்பட்டது. அதனை தொடர்ந்து திருப்பலியும் அன்னையரின் அர்ப்பணமும் இடம் பெற்றது. அருட் தந்தை M.K.S. பிரான்சீஸ் C.M.F. அடிகள் கார்மேல் அன்னையின் ஆழமான கருத்துக்களையும் பணியின் சிறப்பையும் எடுத்துரைத்தார். திருப்பலி முடிவில் இவர்களுக்கு உத்தரியம் வழங்கப்பட்டு, விழா சிறப்புடன் நிறைவு பெற்றது,

**தலைவீ கி. பேர்ணடேற்**
**குளமங்காடு**

## யாழ். மறைமாவட்ட இளையோர்...... (5ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றங்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி இளையோரை உற்சாகப்படுத்தினர். பின்பு மதிய போசனத்தைத் தொடர்ந்து குழு ஆய்வு இடம்பெற்றது.

இக்குழு ஆய்வில் மூன்று வினாக்கள் முன்வைக்கப்பட்டன.

1. **இன்றைய சூழலில் கிறிஸ்தவ அழைப்பை வாழ்வதற்கு இளையோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எவை?**
2. **பங்குத்தளங்களில் இளையோரின் பங்கேற்பு அதிகரிக்கத் தடையாக இருக்கும் காரணிகள் எவை?**
3. **இளையோர் பணி சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை?**

குழு ஆய்வினைத் தொடர்ந்து பொது அமர்வு இடம்பெற்றது. பொது அமர்வினை இளவாலை மறைக் கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்பணி புனிதகுமார நெறிப்படுத்தினார். குழு ஆய்வில் பெறப்பட்ட கருத்துக்களினடிப் படையில் அவர் கூறியதாவது, "இளையவர்கள் தம் பணிகளை ஆற்ற வேண்டும் என்று ஆர்வத்தோடு செயற்படும் போதுதான் தடைகள் வருகின்றன. நேரமின்மை, தனிப்பட்ட தவறுகள் அனைவரையும் பாதிக்கின்றமை, ஒற்றுமையின்மை, குழுக்களாகச் செயற்படுதல் போன்றவை முன் எடுக்கப்படுகின்றன. இவற்றை திறந்த திட்டமிடலுடன் முறியடிக்க முடியும், அதேவேளை ஆலய நிர்வாகக் கட்டமைப்புக்களுடன் சேர்ந்தியங்க வேண்டுவதோடு மேற்படி நிர்வாகங்களும் இளையோர்களைப் புரிந்துணர்வுடன் செயல்வடிவம் கொடுக்க முன்வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்பாட்டு வளர்ச்சிக்காக அதிஸ்ரலாப சீட்டிழுப்பு நிகழ்த்தப்பட்டு பரிசில் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதேவேளை அன்று காலை 10.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை யாழ் மாவட்ட போதனா வைத்திய சாலையின் நடமாடும் இரத்ததானப் பிரிவை அழைத்து இரத்ததான நிகழ்வும்இடம்பெற்றது. சிறப்பம் சமாகும். இளையவர்கள் தமக்குரியவர்கள் மட்டுமல்ல பிறருக்குமுரியவர்களே என்று எடுத்துக் காட்டினர். இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் இணைப்பாளர் அருட்பணி. எமில்போல் மற்றும் கிளி, முல்லை மறைக்கோட்ட அருட்தந்தையார்கள் ஏனைய அருட்தந்தையர்களுள் சிலரும் கலந்து கொண்டு இளையோர்களை வாழ்த்தி நின்றனர்.

ஈற்றில் யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய பிரதித் தலைவர் செல்வி. சைலா இவ் எழுச்சி மிகு ஒன்றுகூடலினை சிறப்பிக்க செயற்பட்டு உழைத்த அனைவருக்கும் நன்றி கூறி நிற்க நிகழ்வு மாலை 4.15ற்கு இனிதே நிறைவு பெற்றது.

"இளையோரே எழுக!
இறையாட்சி அமைக்க!"

யாழ் மறைமாவட்ட இளையோர்
ஒன்றியத் தலைவா

**செல்வன். பெனற் றொசாய்றோ**

**யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட அதிஸ்ரலாப சீட்டிழுப்பில் பரிசுபெறுவோர் விபரம்**

- 1ம் இடம் : 4866
- 3ம் இடம் : 1140

ஆறுதல் பரிசுபெறுவோர்

- 2957
- 2227
- 1007
- 3249

**இப்பரிசில்களை மறைக்கல்வி நடுநிலையத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.**

**நன்றி**


**விண்ணக வாழ்வின்**
**40 ஆம் வருடநினைவு**



அன்னை மடியில் 06.10.1962
ஆண்டவன் மடியில் 26.06.1970

**மிரியம் ஷாமினி சில்வெஸ்ரர்**

ஆண்டுகள் நாற்பதாகியும் நின்
நினைவுகள்
எம் நெஞ்சங்களை நனைக்கின்றன.

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்.

சுருவில்

Advt-45/10

**விண்ணக வாழ்வின்**
**5 ஆம் வருட நினைவலைகள்**

அன்பால் பூத்த விழிகளும்
ஆரத்தழுவிய கரங்களும்
ஈரம் நிறைந்த இதயமும் ஓய்ந்து
ஆண்டுகள் ஐந்து கரைந்தன.
ஆறுதல் தரவல்ல ஆண்டவனை
பணிந்து நித்திய அமைதியில்
நீங்கள் இளைப்பாற வேண்டுகிறோம்.



அமரர்
**திருமதி அந்தோனி எவ்சேனி**
மண்ணில் 27.12.1932
விண்ணில் 25.06.2005

**குடும்பத்தினர்**
தலசிகுளம், கொடிகாமம்

Advt-46/10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி A9 பாதையில் அமர்ந்து அருள் பாலிக்கும் தூய அந்தோனியாரின் ஆலய பெருவிழா



கோடி அற்புதராம் தூய அந்தோனியாரின் பெருவிழா கிளிநொச்சி நகரில் A9 வீதியில் (155ம் மைல்) அமைந்துள்ள இடத்தில், நீண்டதொரு போர்க்கால சூழ்நிலையின் நிறைவில் நடைபெற்றது. பல இன்னல்கள் துன்பங்கள், இடப்பெயர்வுகள், போன்ற வேதனைகளையும், உறவுகள் இழந்த ஓர் சமூகமாக இப்பங்கு மக்கள் ஒன்று கூடி பக்திப் பற்றுதலுடன் ஐந்து நாட்கள் ஆயத்த வழிபாடுகளை மேற்கொண்டு, ஆனி 12ம் திகதி நற்கருணை பெருவிழாவும் ஆனி 13ம் திகதி புனிதரின் திருநாள் பெருவிழாவும் நடைபெற்றது. மிக எளிமையான முறையிலும் அதேவேளை பக்தி உணர்வுடனும் நடைபெற்ற விழாவின் மூலம் தூய அந்தோனியாரின் ஆறுதல் நிறைந்த பரிந்துரையை கண்ணீர மல்க இறைமக்கள் பெற்றுச் சென்றார்கள்.

**அருட்பணி ஜேம்ஸ்நாதன்**

### அமெரிக்காவில் அன்னை........ 

1ம் பக்க தொடர்ச்சி

போது அத்தபால்தலை வெளியிடப்படும். 44 சென்ட் விலையுடன் இத்தபால் தலையை அமெரிக்க ஐக்கிய நாட்டு ஓவியர் தாமஸ் பிளாக்ஷீர் வரைந்துள்ளார்.

**நன்றி முன்னா**

### திருத்தந்தை திருச்சபைத் தலைவராகப் ........ 

1ம் பக்க தொடர்ச்சி

ஏப்ரல் 16 ஜெர்மனியிலுள்ள பவரியா பகுதியின் மார்க்ல் அம் இன் என்ற ஊரில் பிறந்தார். திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற ஐந்தாமாண்டு நிறைவையும் தான் பயணம் செய்த மால்டாவில் கொண்டாடினார் என்று திருப்பீட அதிகாரப்பூர்வ பேச்சாளர் இயேசு சபைக்குரு பெதரிக்கோலொம்பார்தி செய்தியாளர்களிடம் கூறினார். **நன்றி மன்னா**

## கிளிநொச்சி அம்பாள்குளம் தூய சதாசகாய அன்னையின் ஆலய பெருவிழா



கிளிநொச்சி அம்பாள்குளம் தூய சதாசகாய அன்னையின் ஆலயப் பெருவிழா இரண்டு ஆயதத நாட்களுடன் இனிதே நடைபெற்றது. பல இன்னல்கள் துன்பங்களை தாங்கிய மக்கள் இடம்பெயர்வின் பின் மீளவும் தமது ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து அன்னையின் விழாவினை எளிமையான முறையில் கொண்டாடினார்கள். நற்கருணை பெருவிழா திருப்பலியை வன்னி மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி. யாவிஸ் அடிகள் நிறைவேற்றி நற்கருணை ஆசீர்வாதத்தினையும் வழங்கினார்.

அன்னையின் திருநாள் திருப்பலியை, தர்மபுரம் பங்கின் புதிய பங்குத்தந்தை அருட்பணி. எட்வினாதன் அடிகளார் நிறைவேற்றினார் ஒருவருட இடைவெளியின் பின்னர் அன்னைக்கு விழா எடுத்து. அன்னையின் சகாயம் நிறை பரிந்துரையை நிறைவாக பெற்று மகிழ்வோடு, நம்பிக்கை நிறைந்த் மனதோடு வாழ பங்கு மக்கள் உறுதி கொண்டனர்.

**அருட்பணி ஜேம்ஸ்நாதன்**

### ஆயரின் சாட்சிய வாழ்வு.............. 

1ம் பக்க தொடர்ச்சி

**மன்னார் மறைமாவட்டம்**

கடந்த மூன்று சகாப்தங்களாக எமது தமிழ் பிரதேசங்களில், குறிப்பாக மன்னார், யாழ் மறைமாவட்டங்களில் இடம் பெற்ற போர்களும் போரின் வடுக்களும் அவர் தம் பணி வாழ்வில் பெரும் தாக்கங்களையும் காயங் களையும் ஏற்படுத்தியுள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையே. அதுமட்டமல் லாது இம்மறைமாவட் டங்களில் பல குருக்கள் காலத்திற்கு காலம் படு கொலை செய்யப்பட்டதையும், காணாமல் போனதையும், இம்சைப்படுத்தப்பட்டதையும் ஏன் சில குருக் கள் குருத்துவ வாழ்வில் இருந்து விலகிச் சென்ற தையும் நாம் மறக்க முடியாது. அத் தோடு பல ஆலயங்கள் தாக்கப்பட்டதும் அதில் பல நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டதும் காலத்தால் மறக்கமுடியாத நிகழ்வுகளாகும்.

**யாழ் மறைமாவட்டம்**

1992ல் யாழ் ஆயர் எமது மறைமாவட்டத்தை பொறுப்பெடுத்ததில் இருந்து பல சாவல்களை எதிர் நோக்கினார். கத்தோலிக்க ஸ்தாபனங்களின் கட்டுக் கோப்புகள் பல சிதைக்கப்பட்டு பெரும் இடம் பெயர்வுகளுடே நாம் நகர்ந்து சென்ற காலத்தில் அவரின் மேய்ப்புப்பணி பல நெருக்கடிகளை சந்தித்தது மேலும் எமது மறை மாவட்டத்திற்கு பெரும் வருவாயை தேடித்தந்த பெருந்தோட்டங்கள் யாவும் இராணுவத்தினர், போராளிகள் வசம் சென்றதால் பொருளாதார ரீதியாக அவர்பட்ட கஸ்ரங்களும் எண்ணிலடங்கா. அது மட்டுமல்லாது கடந்த ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம் பெற்ற இறுதிக்கட்ட போரின் போது வருணிக்கமுடியாத மனித அவலங்களையும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களையும் கோடிக் கணக்கான உடமைகளையும் யாழ் திருச்சபை இழந்த போது ஆயருக்கு பெரும் துயராய் அது அமைந்தது. ஏன் ஆண்டாண்டு காலமாக பேணிப்பாதுகாத்து வந்த பல நூற்றுக்கணக்கான பெறுமதிமிக்க பதிவேடுகள் யாவும் அழிந்து போனதும் பெரும் பாதிப்பை ஆயருக்கும், யாழ திருச்சபைக்கு ஏற்படுத்தியது. இவை யாவும் எமது ஆயரின் பணி வாழ்வில் மறக்க முடியாத ஈடுசெய்ய முடியாத காயங்களாய், மனப் பதிவுகளாய் உள்ளன.

**ஆயரும் அவர் பணிகளும்**

இருப்பினும் "ஓநாய்கள் வருவதை கண்டு ஆயன் மந்தைகளை விட்டு ஓடுவதில்லை" என்பதற்கு இலக்கணமாக எமது ஆயர் பெரும் இழப்புக்களை சந்தித்தாலும் மனமுடைந்து போகாமல், சோர்ந்து விடாமல், உடல்களைப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாமல எங்கெங்கெல்லாம் மந்தைகள் சிதறடிக்கப்பட்டனவோ அங்கங்கெல்லாம் அவைகளை தேடிச்சென்றார். அவர்களுடன் தங்கி வாழ்ந்தார். உண்டு குடித்து உறங்கினார். தேவைப்பட்ட போதெல்லாம் அவர்களுக்கு தற்காலிக வாழ்விடங்களை அமைத்து கொடுத்து வாழ வைத்தார். அங்கெல்லாம் தற்காலிக ஆலயங்களை கட்டி வழிபாடு செய்ய ஆவன செய்தார். கோடிக்கணக்கான ரூபாய்களை கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஊடாக செலவு செய்து உணவூட்டி பசியாற்றினார். ஏன் பல இடங்களில் நிரந்தர வீட்டுத் திட்டங்களை அமைத்து புதிய வாழ்வை கொடுத்தார். மேலும் பல வாழ்வாதாரங்களை தேடிக் கொடுத்தார். இன மத மொழி பேத மின்றி சகோதர அன்போடு எல்லோ ருக்கும் ஆயன் என்ற முறையில் மக்களின் நல் வாழ்வுக்காய் உழைத்தார். இடம்பெயந்தோர் முகாம்களில் பிறமத மக்களின் வழி பாட்டு உரிமைகளை மதித்து அவர்கள் தங்கள் மத வழிபாடுகளை செய்ய பொருளாதார உதவி களை தாராளமாய் செய்தார். கல்வி சமூகத்தின் மேம்பாட்டுக்காய் கடும் பாடுபட்டு உழைத்தார். இறுதியாக போர் ஓய்ந்து விட்ட போது திரும் பவும் தன் மந்தைகளை ஒன்றாய் கூட்டுச்சேர்ப்பதில் தன் குருக்களுடன் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைத்து வருகின்றார். இப்படிப்பட்ட நல்ல தொரு ஆயனுக்காய் கல்வி சமூகத் துடன் சேர்ந்து நாமும் இந்நாளில் இறைவனுக்கு நன்றி கூறி வேண்டுதல் செய்வோம்.

### ஆன்மீக ஆழம் ............ 

1ம் பக்க தொடர்ச்சி

இயேசுவின் வார்த்தைக்கு வடிவம் கொடுப்பவரே எம் ஆயர்.

கொடிய யுத்தத்தின் விளைவுகளையும் அழிவுற்ற எம் மக்களின் வாழ்வையும் கண்டு கருணைகொண்டு ஓடோடிச்சென்று வன்னி, ஏனைய இடங்களுக்கெல்லாம் நானே உங்கள் ஆயன் நான் இருக்கின்றேன் என்ற அவரது ஆறுதல்களும், பிரசன்னமும் எத்தனையோ மக்களை உள ஆற்றுப்படுத்தியது.

இறுதியில் ஆயன் என்று சொன்னால் அது தலைமைப் பண்பைக் குறிக்கும். அதன்படி ஒவ்வொரு தலைவனும் - ஆயனும் தன் மக்களை ஆடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் அவர்களின் பிரச்சனைகளை முழுமையாகத் தெளிவாகக் கண்டுபிடித்து நல்லவழியில் கொண்டு செல்லவேண்டும் என்பதறக்கிணங்க எம் ஆயர் இவற்றுக்கெல்லாம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு என்று தான் நான் சான்று பகர்வேன். தொடர்ந்தும் அவரது அன்பும், பணியும் எம் மறைமாவட்டத்துக்கு கிடைக்க, இறைவன் தாமே நல்ல உடல் உள சுகத்தை அவருக்கு அளிக்க இறைவனை வேண்டுவோம்.

## இறைவனின் வார்த்தையை.....

1ம் பக்க தொடர்ச்சி

தூய அந்தோனியார் ஒரு தலை சிறந்த போதகர், இறையியலாளர், நாவன்மை மிக்கவர். அவரது பேச்சு கேட்போரின் உள்ளங்களை ஊடுருவி பாய்ந்தது. இதிலிருந்து உருவாகிய மனமாற்றங்களும், உருமாற்றங்களுமே எண்ணி லடங்கா புதுமைகளாக மக்களால் பேசப்பட்டது. இருப்பினும் அவர் காலத்தில் பிரிவினைவாதிகளாலும், அதிகாரிகளாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட தப்பறையான போதனைகளுக்கும் அறியாமைகளுக்கும் பதிலடி கொடுக்கும் பொருட்டு அவ்வப்போது பல புதுமைகளை ஆற்றினார் என்பது உண்மையே. அவரது பேச்சு வன்மையால் பிரிவினை வாதிகளின் வாயை அடக்கினார். ஏழைகளுக்கும் அறியாமையில் அமிழ்ந்து கிடப்பவர்களுக்கும் அறிவுரை புகட்டினார். குருக்களை கண்டித்து அவர்களது கடமைகளை நினைவூட்டினார். நற்செய்தி அறிவித்து பாவிகளை மனந்திருப்பினார்.

மேலும் அவரது சமூக பணிகள் பற்றி குறிப்பிடும் போது; நாம் அறிந்தது போல் நொந்தவர்கள் ஏழைகள் எனப்படுவோருக்கு இல்லங்களை கட்டிக்கொடுத்தும் பொருள் பண்டங்களை கொடுத்தும் சமூகப் பணி ஆற்றவில்லை. மாறாக பொய்மையில் வாழ் தோருக்கு மெய்மையை எடுத்து கூறுவதிலும், நீதி கேட்டு நிற்போருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதிலும் முன்னின்று செயற்பட்டார்.

எனவே இன்று தூய அந்தோனியாருக்கு விழா எடுக்கும் நாம் அவரின் புதுமைகளைப் பற்றி மட்டும் பேசி பெருமை கொள்ளாமலும், புதுமைகளை மட்டும் எதிர்பார்த்து அவரிடம் வராமலும் இருப்போம். மாறாக அவர் கையில் ஏந்தியுள்ள இறைவார்த்தையை பற்றியும் அதன் வழி அவர் செய்த புதுமைகள் பற்றியும் பெருமை கொண்டு அவர் வழி நாமும் மனத் துணிவுடனும் அஞ்சா நெஞ்சுடனும் சமுதாய அநீதிகளை எடுத்துக் கூறி இறைவார்த்தையின் வழி நின்று நீதியை நிலைநாட்டி, உண்மைக்கு சாட்சியம் பகர்ந்து அவனியெங்கும் அன்பின் அரசை கட்டி எழுப்ப புனிதர் வழி இறை தந்தையிடம் இத்திருப்பலி ஊடாக வரம் கேட்போம் என எடுத்துக் கூறி மறையுரையை நிறைவுசெய்தார். தொடர்ந்து திருப்பலியும் திருச்சுருபநபவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

***அருட்பணி அன்ரனிதாஸ் அடிகள்***

## குருமுதல்வர் ...

1ம் பக்க தொடர்ச்சி

சந்தித்து ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தி மக்களின் வாழ்வில் நீங்காத இடம்பெற்றவர் எம் ஆயர். குருக்களின் நல்னில் அக்கறையும் கரிசனையும் கொண்டு அனைத்து குருக்களையும் நெறிப்படுத்தி, கிளி முல்லை மறைக்கோட்டத்தில் மீளத்திரும்பும் மக்களுக்கு ஆன்மீக நலனை கருத்திற் கொண்டு செயலாற்றி வரும் ஆயருக்கு ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை நிறைவாக பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றேன்.


## 96 வது பிறந்தநாள் நினைவும் 8ம் ஆண்டு நினைவு தினமும்



**திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர்**

**13.07.1914 — 11.11.2009**

அன்புள்ள ஐயா, அம்மா
ஆலமரம் போல் வளர்ந்து – அன்று
அழகு நிழல் தந்தவர்களே – என்றும்
வேறென நீரிருப்பீர் – விழுதுகள்
நாம் வீழ்ந்து விடாதிருப்போம்

இறைவன் சந்நிதியில்
இன்புற்றிருக்க
வேண்டுகின்றோம்



**திருமதி மரியம்மா பத்திநாதர்**

**16.03.1916 — 27.06.2002**

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

அலுக்கை, அளவெட்டி

Advt-47/10



## ஆயனை வாழ்த்துகிறோம்

யூலை மாதத்தில் தனது விழாக் களை நினைவு கூரும் யாழ் மறை மாவட்ட ஆயர் அதி. வந். இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர் களை மனதார வாழ்த்துவதில் புனித வளனார் அச்சக முதல்வர், பதிப்பாசிரியர், அலுவலக பணி யாளர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். உடல் நலமும் ஆன்ம நிறைவும் பெற்று தொடர்ந்து நல்லாயனாய் எம்மடையே வலம்வர எம் ஆயரை வாழ்த்துகிறோம்.

**தூய வளனார் அச்சக குடும்பம்**


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org